Registered at the G. P. O. as a Newspaper விலைசதம் 20

# ஈழநாடு வார மலர்

தேசிய தினசரி
மலர் 8

National Tamil Daily
இதழ் 272

பராபவ ஐப்பசி 26 றஜப் 27 (11-11-66) வெள்ளிக்கிழமை

பாலக்காடு
ஆர். வி. ஜி.
பீடிகளை உபயோகியுங்கள்
தயாரிப்பாளர்கள்:
வ. வ. இராமசாமிப்பிள்ளை
அன் சன்ஸ்,
47, பீச்ரோட், யாழ்ப்பாணம்.

தீபாவளி வாழ்ததுக்கள்
○ பாவிப்பாளர்கள்,
○ வாடிக்கையாளர்கள்,
○ அன்பர்கள்,
○ ஆதரவாளர்கள்
யாபேருக்கும் எமது உளம் கனிந்த தீபாவளி வாழ்த்துகள் உரித்தாகுக.
அன்புள்ள
மில்க்வைற் சோப் தொழிற்சாலை
யாழ்ப்பாணம். போன்: 7233

மாவட்ட சபை

# நகல் மசோதாவே தயாரிக்கப்படவில்லை

## வீண் பயம் வேண்டாமென பீடாதிபதிக்கு பிரதமர் பதில்

கொழும்பு, வியாழன்

**"மாவட்டசபைகள் மசோதா அதன் நகல் உருவில் தயாரிக்கப்படும் போது, அதைவிட்டுக்கருத்துத் தெரிவிக்க நாட்டுமக்களுக்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்கப்படும்."**

இவ்வாறு மங்கள ராஜமகாவிகாரைப் பீடாதிபதிக்குப் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா எழுதியுள்ள ஒரு கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். இக் கடிதம் நேற்று பத்திரிகைகளுக்கு விடுக்கப்பட்டது.

அக்கடிதத்தில் பிரதமர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

"மாவட்ட சபைகள்பற்றிய திட்டங்கள் இன்னும் அமைக்கப்படவில்லையாதலால், இவ்விஷயம்பற்றி இக் கட்டத்தில் விவாதிப்பது

(8-ம் பக்கம் பார்க்க)

தீபாவளி வாழ்த்து
வாசக நேயர்களுக்கும் விளம்பரதாரர்களுக்கும் எமது இதய பூர்வமான வாழ்த்துக்கள்.

## மந்திரிசபையில் மாற்றம் இல்லை

கொழும்பு, வியாழன்

நேற்று அலரி மாளிகையில் யூ. என். பி பாராளுமன்றக் குழுவின் கூட்டம் நடைபெற்றபோது, கல்வி மந்திரி திரு. இரியகொலை, வர்த்தக மந்திரி டாக்டர் எம். வி. பி பீரிஸ், உள்ளூராட்சி மந்திரி திரு. மு. திருச்செல்வம் ஆகிய மூன்று மந்திரிகளும் வெகுவாகக் கண்டிக்கப்பட்டனர்.

இக்கூட்டத்தில் திரு. இரியகொலையும், டாக்டர் பீரிசும் கலந்துகொண்டு பேசினர். யூ. என். பி குழுக் கூட்டமானையால் திரு. திருச்செல்வம் கலந்து கொள்ளவில்லை.

இ. டபிள்யூ. ஈ. வீடியோகம் ராஜாங்க மந்திரி திரு. ஜே ஆர் ஜயவர்த்தனவிடம் ஒப்படைக்கப்படலாமென பிரதமர் டட்லி சேனநாயக்கா கருத்துத் தெரிவித்ததாக அறியப்படுகிறது.

கல்வி மந்திரியிடமிருந்து கல்வி அமைச்சு எடுக்கப்படாதெனவும் தெரிகிறது.

மட்டக்களப்பு இரண்டாவது எம். பி திரு ஏ. எல். இன்னலெப்பேயும், கல்குடா

(8-ம் பக்கம் பார்க்க)

## சுவர் இடிந்து இருவர் காயமுற்றனர்

பலாலி, வெள்ளி

பலாலி சந்தியில் உள்ள ஒருகடையில் சாமான் வாங்க வந்த இருவர்மீது கடையின் ஒருபுறச் சுவர் சரிந்துவிழுந்ததால் இருவரும் காயமுற்றனர். காயமடைந்த எஸ். அருளப்பு, எஸ். தியோகுப்பிள்ளை ஆகிய இருவரும் உடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

## தகநாயகா இன்று திரும்புவார்

திருநெல்வேலி, வெள்ளி

உத்தியோக பூர்வமாக யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருக்கும் உள்நாட்டு அமைச்சர் டாக்டர் டபிள்யூ. தஹநாயகா இன்றிரவே சாவகச்சேரியிலிருந்து கடுகதி ரயில் மூலம் கொழும்பு திரும்புகின்றார்.

முன்னர் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்ச்சி நிரலின் நாளைக்காலையே விசேஷ விமானத்தில் திரு. தஹநாயகா கொழும்பு திரும்பவிருந்தார்.

## "விளையாட்டில் ஐக்கியம்"

### அமைச்சர் பாராட்டு

யாழ்ப்பாணம், வெள்ளி

வட இலங்கையின் உதைபந்தாட்டக் கோஷ்டியும் தென் இலங்கையின் உதைபந்தாட்டக் கோஷ்டியும் சரித்திரத்திலேயே முதல் முறையாக ஒரே மைதானத்தில் விளையாடுவதை நான் மிகவும் பாராட்டுகிறேன், பாராளுமன்ற அங்கத்தவர்கள் வடக்கையும் தெற்கையும் ஒன்று சேர்க்க, பெருமுயற்சி மேற்கொண்டிருக்கும் இத்தருணத்தில், தேசிய ஒற்றுமையை வலுப்படுத்தும் இப்போட்டியை ஒழுங்கு செய்ததையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்."

இவ்வாறு தெல்லிப்பழை யூனியன் கோஷ்டிக்கும் காலி கலு மத்திய மகாவித்தியாலய கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியைக் கண்டு ரசித்த உள்நாட்டு அமைச்சர் டாக்டர் டபிள்யூ. தஹநாயக்கா தெரிவித்தார்.

மேற்படி உதைபந்தாட்டப் போட்டியில் காலிக் கோஷ்டி 4—1 கோல்களால் யூனியன் கல்லூரியை வெற்றி பெற்றது.

இப்போட்டி யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்றது.

## முல்லைத்தீவில் 300 குடும்பங்கள் வீடிழந்தன

### நொச்சிமோட்டை பாலம் உடைந்து போக்குவரத்துத்தடை

வவுனியா, வியாழன்

முல்லைத்தீவில் நேற்றுப் பிற்பகல் 60 மைல் வேகத்தில் வீசிய புயலினால் முல்லைத்தீவில்கரையோரப்பகுதியிலுள்ள சுமார் முந்நூறு குடும்பங்கள் வீடுவாசல்களை இழந்து பாடசாலைக் கட்டிடங்களில் தஞ்சம்புகுந்துள்ளனர்.

கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், அளம்பில், வெள்ளாம் முள்ளிவாய்க்கால், ஆகிய பகுதிகளில் மீனவர் குடும்பங்களும் மற்றையோரும் புயலினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியாவிலிருந்து எட்டு மைல் தூரத்திலுள்ள நொச்சிமோட்டைப் புதிய பாலம் உடைந்ததால் பஸ், கார்போக்குவரத்துச்சேவைகள் ஸ்தம்பித்தன. பஸ் மீது கூடவெள்ளம் பாய்ந்தது. யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற பஸ்களும் அந்த இடத்தில் தங்கிநிற்கவேண்டியேற்பட்டது. பாலம் உடைந்துவெள்ளம் பாய்ந்ததால் அச்சமயம் ஒரு வண்டியில் வந்த ஒரு தாயாரின் கையிலிருந்த குழந்தை வெள்ளத்தினால் 8 மைல் தூரத்துக்கு அடித்துச்செல்லப்பட்டது. பின்னர் இக்குழந்தை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இந்தப்பாலம் இத்துடன் ஆறுவது தடவையாக உடைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## பலாலி விமான நிலையத்தில் வரவேற்பு

பலாலி, வெள்ளி

நேற்றுக்காலை 8 மணிக்கு உள்நாட்டு விவகாரஅமைச்சர் டாக்டர் டபிள்யு. தகநாயகா பலாலிவிமான நிலையத்தை வந்தடைந்தார். அமைச்சரைமுதலில் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகரா மலர் மாலையிட்டு வரவேற்றார். பின்னர் வலிகாமம் வடக்கு காரியாதிகாரி, மயிலிட்டி கிராமசபைத்தலைவர் மற்றும் பலர் மலர்மாலை சூட்டி வரவேற்றனர். மந்திரியின் நெற்றியில் சைவக்குரு ஒருவர் திருநீறுபூசி சந்தனப்பொட்டு வைத்தார் இதைத்தொடர்ந்து மேளதாளங்களுடன் மந்திரி வரவேற்கப்பட்டார்.

பலாலிவிமானநிலையத்தில் பலாலி-வசாவிளான் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவரால் வரவேற்புப்பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது.

மந்திரியுடன் தமிழரசுக் கட்சித்தலைவர் திரு. எஸ் ஜே வி. செல்வநாயகமும் [illegible] கொழும்பிலிருந்து வந்தார். விமானநிலையத்தில் உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம், வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ. அமிர்தலிங்கம் மற்றும் தமிழ்க் காங்கிரஸ், தமிழரசுப்பிரமுகர்களும் மந்திரியை வரவேற்றனர். யாழ்ப்பாணம் பொலிஸ் சுப்ரீன்டன்ட் திரு. பி. தளையசிங்கம், காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் சுபரீன்டன்ட் திரு. வியனகே, யாழ்ப்பாண உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களும் விமான நிலையத்தில் அமைச்சரை வரவேற்றனர்.

ஆதரவாளர்களுக்கும்
வர்த்தக அன்பர்களுக்கும்
எமது உளங்கனிந்த
தீபாவளி வாழ்த்துக்கள்
S. R. S.
ஜவுளி மாளிகை
நெசவு நிலையம்
216, K.K.S. ரோட், [போன்: 296] யாழ்ப்பாணம்.



அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது உளங்கனிந்த
தீபாவளி வாழ்த்துக்கள் !
ஆ. அப்பையா அன் கோ.,
தலைமை ஸ்தாபனம்: 82, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
கிளை ஸ்தாபனம்: 54, பெரியகடை, யாழ்ப்பாணம்.
போன்: 506

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மந்திரி சபையில் மாறுதல்

## தேர்தலின் பின் இந்திரா நிலை என்ன?

### உலக மேடை

எஸ். எம். ஜி.

இந்திய உள்விவகார அமைச்சர் பதவியிலிருந்து திரு. குல்ஸாரிலால் நந்தா ராஜிநாமாச் செய்துவிட்டார். ராஜிநாமாவை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டார். உள்விவகார அமைச்சராக ஒருவர் நியமிக்கப்படும்வரை திருமதி இந்திராவே அந்தப் பொறுப்பையும் கவனித்து வருவார். புதிய உள்விவகார அமைச்சராக யார் நியமிக்கப்படக்கூடும்? பிரதமர் இந்திரா தமது மந்திரிசபையையே மாற்றியமைப்பாரா? என்பனபற்றி ஆராயுமுன் திரு நந்தாவின் பதவி விலகலுக்கான காரணங்களை பற்றி சிறிது கவனிப்போம்.

உள்நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதும் உள்நாட்டு நிர்வாகம் சீராக நடைபெறுவதும் உள்விவகார அமைச்சரின் முக்கிய பொறுப்பும் கடமையுமாகும். நாட்டில் நிலவும் நிர்வாக ஊழலை ஒழித்துக்கட்ட திரு. நந்தா தாம் பதவிக்கு வந்தநாளிலேயே சங்கற்பம் செய்துகொண்ட போதிலும் அவர் அதில் வெற்றிபெறவில்லை. ஊழல் ஒழிந்துவிடவில்லையாயினும் உள்நாட்டில் அமைதியாவது, அந்நியரின் ஆக்கிரமிப்பு அபாயம் நிலவும் போது அதை எதிர்த்து நிற்பதற்கு அவசியமான தேசிய ஒருமைப்பாட்டையாவது திரு. நந்தா நிலைநாட்டவில்லை. தேர்தல் நெருங்க நெருங்க அரசாங்கத்தின்மீது மக்களுக்கு எந்தெந்தமுறையில் அதிருப்தி ஏற்படுத்த முடியுமோ அந்தந்த முறைகளிலெல்லாம் முயற்சி செய்வது எதிர்க்கட்சிகளின் அரசியல் தந்திரம். இதற்கு அரசியல் கட்சிகள் 'இளங்கன்று பயமறியாது' என்ற பழமொழியைப் பின்பற்றி மாணவர்களை—இளைஞர்களைத் தங்களுக்குப் பயன்படுத்திக் கொள்கின்றனர். சில வருடங்களுக்கு முன் இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் மாணவர்களை அரசியலுக்கு உபயோகிப்பதில்லையென அரசியல் கட்சித் தலைவர்கள் ஒன்றுசேர்ந்து தீர்மானித்த போதிலும் அது நடைமுறையில் சரிவரச் செயல்படவில்லை.

விலைவாசிஉயர்வு, உணவுப்பற்றாக்குறை, மொழிப்பிரச்னை ஆகியவைகளைக் காரணமாக வைத்து அரசியல் கட்சிகள் இந்தியாவின் பல்வேறு ராஜ்யங்களில், ஹர்த்தால், கடையடைப்பு, வேலைநிறுத்தம் ஆகியவைகளை உள்ளடக்கிய ''பந்த்'' களை அனுஷ்டித்தனர். அமைதியான 'பந்த்' என்று பெயரிடப்பட்டாலும் அது ஆர்ப்பாட்டத்திலும் பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகத்திலும் முடிவடைவதுண்டு. இப்படித்தான் முடிவடைந்திருக்கின்றன இவைகளை முன்னிலேயே—உறுதியான நடவடிக்கைகள்மூலம் கிள்ளியெறியத் தவறிவிட்டதனால் விளைவு மோசமானது. ஆந்திராவில் விசாகப்பட்டினத்தில் ஐந்தாவது உருக்காலை அமைக்கவேண்டுமெனக் கோரி மாணவர்களும் மற்றையோரும் பெருங் கிளர்ச்சியும் ஆர்ப்பாட்டமும் நடத்தியதுடன் தீவைப்பு முதலிய வெறிச்செயல்களிலும் ஈடுபட்டு பெருஞ்சேதத்தையும் ஏற்படுத்தினர். இந்தக் கிளர்ச்சிக்கு எதிர்க்கட்சியினர் மட்டுமல்ல, காந்தீயவாதி எனப்பெயர்பெற்ற அமிர்தாராவ் என்ற காங்கிரஸ் 'சாகும்வரை' உண்ணாவிரதம் ஆரம்பித்ததும், கிளர்ச்சியை அடக்கி அமைதியை நிலைநாட்டுவதற்குமாறாக ஆந்திரமுதலமைச்சர் பிரம்மானந்தரெட்டி டில்லிக்கு ஓடிப்போய், விசாகையில் உருக்காலை நிறுவப்படும் என வாக்குறுதியாவது அளித்தால்தான் கிளர்ச்சி அடங்கும் என்று பிரதமரிடம் வேண்டுகோள் விடுத்ததும் நிலைமை மோசமானதற்குக் காரணமென்று கூறலாம். இந்திய ராஜ்யங்களில் சமீபகாலமாக - தேர்தலை நோக்கமாகக்கொண்டு நடைபெற்றுவரும் கிளர்ச்சிகளுக்கும் பலாத்காரச் செயல்களுக்கும் எதிர்க்கட்சி அரசியல் வாதிகள் மட்டுமல்ல, ஆளும்கட்சியான காங்கிரஸ்காரர்களும் காரணமாக இருந்திருக்கின்றனர். ஆந்திரக்கிளர்ச்சியைப்பார்த்து அதற்கு எதிரொலியாக சேலத்தில் உருக்காலை வேண்டுமென சேலம் மாணவர்களும் கிளர்ச்சி ஆரம்பிக்கப் போவதாகச் செய்திகள் வெளியானதும், ''அதற்கு அவசியமே இல்லை. சேலம் உருக்காலையை மத்திய அரசாங்கம் அமைக்காவிட்டாலும் தமிழ்நாடு அரசாங்கம் அமைப்பது உறுதி'' என்று தமிழ்நாடு முதலமைச்சர் திரு பக்தவத்சலம் அறிவித்து நிலைமையைச் சமாளித்தது ராஜதந்திரம் இதர ராஜ்யகாங்கிரஸ் ஆட்சியாளர் பின்பற்றியிருக்கவேண்டியதொன்று. 'பந்த்'கள், கிளர்ச்சிகள், எல்லாவற்றிலும் உச்சக்கட்டமாக சென்ற திங்கட்கிழமை இந்திய பார்லிமெண்ட் கட்டிடத்தின் முன்னால் நடந்த பசுவதைத் தடுப்புக் கிளர்ச்சி அமைந்தது. கிளர்ச்சிகளை உறுதியுடன் சமாளிக்கத் தவறிவிட்டார் என்று காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கண்டனங்களும் டில்லி ஆர்ப்பாட்டக் கிளர்ச்சியும் திரு. நந்தாவின் ராஜிநாமாவுக்குக்காரணமாக அமைந்தது.

திரு. நந்தாமீது தவறுகள் இருந்தாலும் இந்திய யூனியன் மந்திரிசபையில் பூரண ஐக்கியம் இல்லாததும் பிளவு நிலவுவதுமே இந்த நிலைமைக்கு முக்கிய காரணமென்று கருத இடமுண்டு. திருமதி இந்திராகாந்தியை பிரதம மந்திரியாக ஜனநாயக முறையில் காங்கிரஸ் ஆளும் கட்சி தெரிவு செய்த போதிலும் மொரார்ஜி வெளிப்படையாக எதிர்த்துப் போட்டியிட்டதுபோல் வெளிப்படையாகத் தமது ஆசையைத் தெரிவித்துக் கொள்ளாதவர்கள் பிரதம மந்திரிப் பதவியில் ஆசை வைத்துள்ளனர் என்று சந்தேகிக்க இடமுண்டு.

இப்போதுள்ள நிலையில் பொதுத் தேர்தல் நடைபெறுவதற்கு இன்னும் 99 தினங்களே இருக்கும் இச்சமயத்தில் பிரதமர் இந்திரா தமது மந்திரிசபையை மாற்றியமைப்பாரா? அல்லது நந்தாவுக்குப் பதில் புதிதாக ஒருவரை நியமித்து தேர்தல் முடிவைப் பார்த்திருப்பாரா? திரு. நந்தாவின் இடத்துக்கு பாதுகாப்பு மந்திரி திரு. சவான் நியமிக்கப்படக்கூடுமென்று கூறப்படுகிறது. அதே சமயம் திரு. எஸ். கே. பட்டீல் நியமிக்கப்படலாமென்றும் வதந்தி. இருவரும் தயவு தாட்சண்யமின்றி உறுதியான நடவடிக்கை எடுக்கக்கூடியவர்களே. ஆனால் திரு. சவானைவிட, பிரதமர் பதவியில் திரு.பட்டீலுக்குக் கண்ணோட்டம் சிறிது அதிகம். இதே நிலை இன்னும் நீடித்தால் தேர்தலுக்குப் பின் காங்கிரஸ் ஆட்சிபீடத்திலமர்வதானாலும்கூட, திருமதி இந்திரா பிரதமராக இருக்கச் சம்மதிப்பாரா

(7-ம் பக்கம் பார்க்க)


## எல்லோர்க்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்!

# C. W. E.

ஸ்தாபனத்தாரின் பிடவைகளை மொத்தமாக விநியோகம் செய்வதற்கு
பிரதான விற்பனையாளராக நியமிக்கப்பட்டிருக்கிறோம்
என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

வர்த்தக அன்பர்கள் எம்முடன் தொடர்புகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தீபாவளி தேவைகளுக்கான

சகல விதமான

C. W. E. பிடவைகளும் மற்றும் ஜவுளிவகைகளும் நிதானமான விலைகளில்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

# யாழ்ப்பாணம்சீப்சைட்

(C. W. E. பிரதான மொத்த விநியோகஸ்தர்கள்)

பிரதானவீதி, பருத்தித்துறை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய வட்டம்

இவ்வாரச் சிறுகதை

அ. செ. மு.

"இன்னும் எவ்வளவோ தூரம் போகவேண்டும்."

செல்வச்சந்நிதிக்கு வண்டில் கட்டிப் பயணம்போய்க்கொண்டிருந்தபோது எங்களோடு கூட வண்டிக்குள் வீற்றிருந்த பாட்டியம்மா இப்படிக் கூறினாள். வீட்டு வாசலிலிருந்து நகர்ந்த வண்டி இரண்டுகல்தொலைவு கூடப் போயிருக்காது. அதற்குள், பொறுமையிழந்தவனாக "இன்னும் கனதூரமிருக்கோ பாட்டியம்மா?" என்று நான் கேட்டதற்குத்தான் அவள் இவ்வாறு சொன்னாள். எவ்வளவு சரியாகச் சொல்லிவிட்டாள், வாழ்க்கைப்பயணத்திலகூடத்தான் நாம் இன்னும் எவ்வளவோ தூரம் போகவேண்டியிருக்கிறது. அன்றைக்கு நான் ஐந்து அல்லது ஆறு வயதுச் சிறுவன். பயணத்தின் பெரும் பகுதியையும் முடித்துவிட்டு கடைசி எல்லைக்கல்லை நெருங்கி 'குடுகுடு' நடைபோய்க் கொண்டிருப்பவள் பாட்டியம்மா.

அந்த இரட்டைத்திருக்கல் பயணவண்டியில் எங்கள் வீட்டுக் குடும்பத்தினர் முழுப்பேருமே, வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருப்பதைப் போலக் கூடியிருந்து பேசிக்கொண்டிருக்கிறோம். வைக்கோல் பரப்பி அதன் மேல் விரித்திருந்த மட்டக்களப்புப் புதுப்பாய் ஏதோ ஒரு கல்யாணவீட்டு இனிய நினைவை மனத்தே தோற்றுவிக்கின்றது. மழை கொட்டுவது போல வெளியே நிலாப் பொழிகிறது. தெருவில் நாம் அடிக்கடி ஒதுங்கி வழிவிட்டுக்கொடுப்பதற்கு முன்னாலும் சரி பின்னுக்கும் சரி இன்றைக்குப் போல் வேக வாகனங்கள் யாதொன்றுமில்லை. நெடுகிலும்பாதசாரிகளும் பயண வண்டிகளும் மொட்டை வண்டிகளும் ஒற்றையும் இரட்டையும் ஊர்வனவும் நடப்பனவுமே தாம். மிகப்பழையகாலம்—சந்நிதியில் மயில் தோகை விரித்து நின்றாடினால் அதைச் சுற்றி ஒரு பெரிய கூட்டமே கூடிவிடும். மயிலே மயிலே ஒரு இறகுபோடமாட்டாயா என்று ஆசையுடன் கேட்டவர்கள் அந்தக் கூட்டத்தில் இருந்தார்கள். இன்று நேற்றுத் தோன்றிய சில அபூர்வ நுண்ணறிவாளர்களைப் போல அலெக்சாந்தரை மயில்மேலே ஏற்றிவைத்து சந்நதம் கொள்ளாமல் முருகனை மயில் மேலே ஆரோகணித்து வைத்து மனக்கண்ணில் அந்தத்திருக்கோலம் கண்டு மகிழ்ந்து பக்திபரவசமுற்று கண்களை மூடி நின்று தியானித்தவர்கள் வாழ்ந்த காலம்—அநேகமாய் நாற்பது ஆண்டுகளிருக்கும். நெடுந்தூரம் வழி நடந்து காவடி எடுத்து கரகம் ஆடி வரும் பக்த கோடிகளுக்கு இந்தக் 'கிறவல்' ரோட்டில் பொழியும் நிலவு ஒன்றுதான் சகல சுகசம்பத்தும்.

"நான் கேட்டது வாங்கித் தருவியா பாட்டியம்மா?"

"நீ சொன்னபடியெல்லாம் கேட்டு நல்லபிள்ளையாயிருந்தால் வாங்கித்தருவேன்."

"ஓம் பாட்டியம்மா."

ஒப்புக்கொண்டு விட்டேன். ஆனால் நல்லபிள்ளையாக எப்படி இருப்பது? எல்லோருக்கும் நல்லபிள்ளையாக இருக்கும்படி பாட்டியம்மா சொல்லவில்லைத்தான். அவள் சொன்னபடியெல்லாம் கேட்டு அவளுக்கு நல்லபிள்ளையாக நடந்து அவளிடம் மட்டும் நல்லபிள்ளை என்று ஒரு நற்சான்று பெற்றுவிட்டால் அதுபோதும். ஆனால் அவ்வளவு சுலபமான காரியமல்லவே அது!

நான் வாங்கித் தரும்படி பாட்டியம்மாவிடம் கேட்டிருந்தது ஒரு கோழிக்குஞ்சுப் பாவை. செல்வச் சந்நிதி கொடியேற்றத்துக்குப் பல நாட்களிருக்கவே இதற்கு அவளிடம் அடிப்போட்டு விட்டேன். இன்றைக்கெல்லாம் அந்தக்கோழிக்குஞ்சுப் பொம்மை யாருக்காவது ஞாபகமிருக்குமோ தெரியவில்லை. ஒரு கைப்பிடி மஞ்சத் திரள் அளவு பருமனாகத்தானிருக்கும். தலை, கால், கண், சொண்டு எல்லாம் வைத்துப்பார்த்தால் நேற்றுத்தான் முட்டைக்குள்ளிருந்து வெளிவந்த உயிர்க்கோழிக் குஞ்சுபோல மிக அழகாயிருக்கும். அவ்வளவுதான் அதன் வேலை. தொட்டுப்பார்த்தால் பட்டுக்கம்பளம் போல அத்தனை மென்மையாகவிருக்கும். கண்ணுக்கும் கருத்துக்கும் வெகு பசந்து! ஐம்பது சதத்துக்கு ஒரு குஞ்சு—ஒரு பொம்மை. இன்றைக்குத்தான் ஐம்பது சதத்துக்கு இரண்டு மாதம் மூன்றுமாதம் வளர்ச்சியுற்ற பண்ணைக் கோழிக்குஞ்சே வாங்கக்கிடைக்கிறதே. பாட்டியம்மா இன்னமும் உயிரோடிருந்திருந்தால் இந்த மிசின் வேலையை எல்லாம் அவள் ஒருபோதும் ஒப்புக் கொள்ள மாட்டாள். அதுகள் ஒவ்வொன்றும் இரண்டு கத்துகிறதைப் பார்த்துவிட்டு இதென்னடா காணான் கோழியா கவுதாரியா என்று கேட்டுத்தலையிலடித்துக் கொள்வாள்!

"என்னென்னவோ எல்லாம் ஆக்கிப்படைத்துகாட்டுறானுகளாம். செத்தவங்களை பிழைக்கவைப்பான்களா! ஆணும் பெண்ணும் சேராமல் பிள்ளைப் பெறுவான்களா? அது ஒருக்காலும் முடியாது. நடக்கவே நடக்காது" என்று வண்டிக்காரரர் வேலுப்பிள்ளையோடு கொழுவல் நியாயத்தில் இறங்கிவிடுவாள்.

வேலுப்பிள்ளை மட்டும் விட்டுக் கொடுப்பாரா என்ன? ஒரு தரவளி ஆள் அவர்.

"உங்கட காலத்திலே ஆள் செத்துப்போச்சோ உயிருடனிருக்கோ என்பதே தெரியமாட்டாமல் பாடைகட்டிச் சுடலைக்குக் கொண்டு போய் ஆளை வைத்துக் கொழுத்தினார்கள் ஆச்சி. கட, அந்த ஆளின் பெண்டாட்டியையுமே உடன்கட்டை ஏற்றி உயிரோடே நெருப்புவைச்சு விடுவார்கள். அப்படியெல்லாம் இனிநடக்காது பாட்டியம்மா" என்று எதிர்க்கத் தொடுப்பார்.

"உடன்கட்டை ஏறாத பெண்டாட்டிமார் வாழ்ந்து தான் பின்னே என்ன சுகத்தைக் காண்கிறார்கள். வருசம் முந்நூற்றி அறுபத்தைந்து நாளும் அடுப்பும் நெருப்பும் ஏவலும் கூலியுமாகத்தானே நாளாந்தம் அணுவணுவாகப் பொசுங்கி மாளுகிறார்கள். எப்பன் இசக்குப் பிசக்காய் நடந்துவிட்டாலோ ஊர் வாய்வேறே அவளை உயிரோடே நாவினால் சுட்டுச் சாம்பராக்கிவிடுகிறதே. ஓநாய் ஆட்டுக்குட்டியைப் பிடிச்சு விழுங்கலையோ?" பாட்டியம்மா தன் கட்சியை நிலைநாட்டக் கூறும் விளக்க உரை இது.

நாளது 1966 அக்டோபர் மாதத்தில் இந்த இரண்டு கட்சியுமே இல்லை-நம்மிடமிருந்து வெகுதூரம் போய் மறைந்துவிட்டார்கள். மறுபடி இனிமேல் சந்திரமண்டலத்தில் ஒருவேளை அவர்களைச் சந்திக்கக்கூடியதாயிருக்குமோ என்னவோ!

எங்களைவிட்டு 'கல்யாணத் திண்ணை' இடம்பெயர்ந்து நகர்ந்துபோய்க்கொண்டிருக்கிறது. நவீன வானொலி ரொக்கட் குழாய்க்குள்ளே பத்திரமாக அமர்ந்திருந்து பயணம் செய்வதுபோல நாம் சிரித்துப்பேசிக்கொண்டிருக்க, வண்டி அதுபாட்டில் நம்மைச் சுமந்து போய்க் கொண்டிருக்கிறது.

'சன்னதியிலேஎன்னென்ன பார்க்கலாம் பாட்டியம்மா?"

"வாவன், எவ்வளவு வேடிக்கை விநோதமெல்லாம் காட்டுகிறேன். ஆடும் மயில் பார்க்கலாம், கங்கை பார்க்கலாம். காவடி ஆட்டம், கரகாட்டம் பார்க்கலாம். இன்னும் எவ்வளவு!

மாணிக்க கங்கையில் தீர்த்தமாடியவள் பாட்டி. செல்வச்சந்நிதியில் ஓடும் உப்பாற்றையும் 'கங்கை' என்றே வாய்கூசாமல் சொல்கிறாளே என்றால்-அதற்கு அவளுக்கு உள்ள முருக பக்திதான் காரணம். செல்வச்சந்நிதியிலே அப்பனுடைய ஆறுபடை வீடுகளின் திருக்கோலமுமே கண்டுமகிழ்வாள். யாரும் ஏனென்று கேட்க முடியாது.

பாட்டியம்மா வெற்றிலை போட்டுக்கொண்டு நகரும் திண்ணையிலிருந்த மற்றவர்களின் உரையாடுதலில் கலந்துகொள்கிறாள். நான், வண்டிபோகும் எதிர்த்திசையை நோக்கியவனாய் முன்பக்கம் சரிந்துபடுத்துக் கிடக்கிறேன்.

காளைகள் இரண்டும் ஏறுநடைபோட்டுக் கொண்டு கம்பீரமாகத்தான் நடந்து செல்கின்றன. அவற்றின் கழுத்தில் கட்டியிருக்கும் சலங்கைகள் ஜல் ஜல் என்று சப்தித்து அவற்றின்நடைக்கு நடன 'மெருகு' ஏற்றுகின்றன. வண்டி ஓரிடத்தில் மெல்ல நிற்கிறது. வேலுப்பிள்ளை சரேலெனக்குதித்து தெருவோரம்சென்றுவேலிக் கதியாலில் இரண்டு பெரிய குழைக்கொப்புகளை இடுக்கிக்கொண்டுவந்து வண்டியின் நுகத்தடியில் இரண்டு நாம்பன்களுக்கும் மத்தியில் நடுமத்தியாக அவற்றின் பார்வைக்கு மட்டும் எட்டும்படி முன்னே நீட்டிக்கொண்டிருக்க அதை வைத்துக்கட்டிவிட்டு காளைகளின் முதுகில் தன் கைகளினால் இதமாகவும் உறைப்பாகவும் தட்டிக்கொடுத்து அதன் பின் [illegible] நுகத்தடிக்கு முன்னே நீண்டு நிற்கும் பசைக் கொடியுடனே வண்டி மேலே நகர்கிறது. ஒரே இருப்பாக இருந்து கால் விறைப்புற்றவர்கள் இதற்குள்ளே தங்கள் கால்விறைப்பும் ஆற்றிக்கொள்கிறார்கள். இரு காளைகளும் தூரத்துப் பச்சையில் இலக்குவைத்தபடியே துரித நடையோடு இன்றன' ஜலங்கை ஒலி எழுந்து எங்கும் சப்திக்கிறது. என் பார்வை நுகத்தடியில் கட்டி வைத்திருக்கும் குழைக்கொப்பில் இப்பொழுது நிலைத்துப்போய் விடுகிறது. அந்தக் கொப்பு நடுவே மறைந்திருந்து ஓரோர் சமயம் வெளியே தலைநீட்டும் வெண் பழுப்பு நிறப்பூ பாட்டி எனக்கு வாக்களித்திருக்கும் கோழிக்குஞ்சாகக் கோலம் காட்டுகிறது.

சுருளி மலை மீதுலாவும்
வேலா உனை
தோத்தரித்தேன் சுப்பிர
மணிய சிலா

காளைகளை விரட்டிக் கொண்டே புது உற்சாகம் பெற்றவராக இவ்வாறுபாடி இராகம் இழுத்த வேலுப்பிள்ளை பின்னால் திரும்பி "எட, திவட்டி ஏண்டா முகம் குப்புறப் படுத்துக் கிடந்து உடம்பு பிடிக்கிறாய். எழுந்திரடா, ஆண்பிள்ளையாம் ஆண்பிள்ளை. எழுந்து ஆச்சியிடம் ஒரு வாய்க்கு வெற்றிலை பாக்கு வாங்கித்தா" என்று என்னை அதட்டுகிறார்.

"ஆச்சி வெற்றிலை பாக்காம்."

நான் என் உடும்புப்பிடியைக் குலைக்காமல் இன்னமும் படுத்துக்கிடந்தபடியே கை நீட்டி பாட்டியம்மா கொடுத்த வெற்றிலைபாக்கை வாங்கி வேலுப்பிள்ளையின் கையில் சேர்க்கிறேன்.

வழியிலே தெருவோரமாக ஒரு கூட்டம் கூடிநிற்கும் காட்சி. 'வள்ளிக்கு வாய்த்தவனே மயிலேறிய மாணிக்கமே' என்று தாளம் போட்டு பஜனை பாடிக்கொண்டு வட்டுக்கோட்டையிலிருந்து நடந்து வந்த அடியார் கூட்டத்தில் ஒருவனுக்கு 'கிறுதி' தூக்கி எறிந்துபோட்டுதாம். அதனால், அவனுக்கு மயக்கம் தெளிய வைக்கும் முயற்சி மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கீழே விழுந்து கிடக்கும் அவன் நெற்றியிலு முகத்திலும் கப்பிக்கிடப்பது தெருப்புழுதி அல்ல, அடியார்கள் இட்ட வெண்ணீறு.

பாட்டியம்மாளுக்கு இதைப் பார்த்ததுமே பக்தி உணர்ச்சிமேலிட்டுவிட்டது. 'அரோகரா செல்வச்சன்னதியனே' என்று இருகரமும் தலைமேல்வைத்துக்கூப்பியவளாய் உள்ளம் நெக்குருகக் கதைசொல்ல ஆரம்பித்தாள் 'அவனை நம்பினவர்க்கு ஒரு குறையும் வராது. இந்த மாதிரி யாத்திரைகளிலே நம் செயலால் ஆவதொன்றில்லை' என்று அவன்மேலே முழுப்பழியையும் போட்டுவிடவேண்டியதுதான். வீடு, சுற்றம், அண்ணன், தம்பி என்று யாருடைய நினைவுமே இருக்கப்படாது' இந்தமுன்னுரையுடனே கதை ஆரம்பமாகிறது. மகாபாரதத்திலுள்ள ஒரு கதை அது.

துரோணாச்சாரியாரிடம் திருதராஷ்டிரன் மக்களும் பாண்டுவின் மக்களும் வில்வித்தை கற்றுக்கொண்டிருந்தார்கள். ஒரு தினம் அவர்களின் வித்தைப் பயிற்சியைப் பரீட்சிக்க எண்ணிய குருதேவர் அவர்கள் யாவரையும் சமீபமாகவிருந்த ஒரு காட்டுக்கு அழைத்துச் செல்கிறார். அங்கு வளர்ந்தோங்கி நின்ற ஒரு பாரிய விருட்சத்தில் அதன் கிளைகளுக்கு நடுவே ஓர் இலக்கு சக்கரம் கட்டித் தொங்கவிட்டு மாணாக்கர் அனைவரையும் அணிவகுத்து நிறுத்தி ஒவ்வொருவராக அந்த இலக்குக்கு குறிவைத்து அம்பு எய்து அதனை வீழ்த்த வேண்டுமெனப் பணித்தார். உடனே துரியோதனன் முன்வந்தான். வில்வளைத்து அம்பு தொடுத்து குறிபார்த்தான்...குருநாதர் அப்பொழுது அவனிடம் கேட்கலானார்: "துரியோதனா, இப்பொழுது உன் பார்வைக்கு என்னவெல்லாம் தெரிகிறது?"

"மரம் தெரிகிறது குருநாதா. அதன் கொம்புகள் கிளைகள் இலைகள் எல்லாம் அழகாகத் தோன்றுகின்றன" என்றான் துரியோதனன்.

"சரி, நேராகக் குறிபார்த்து அம்புவிடுத்து இலக்கு சக்கரத்தை வீழ்த்து பார்க்கலாம்."

துரியோதனன் காதளவோட நாண் இழுத்து முழு விசையுடனே அம்பு விடுத்தான்.

இலக்குத் தவறிவிட்டது. அவன் செலுத்திய அம்பு எங்கேயோ போய் தொலைந்தது.

அடுத்து, கர்ணன் முன்வந்தான்.

"கர்ணா, எங்கே உன் திறமையைக்காட்டு பார்க்கலாம். சரியாகக் குறிவைத்து இலக்குச் சக்கரத்தை வீழ்த்து" என்றார் துரோணாச்சாரியார்.

கர்ணன் முழந்தாளில் மண்டியிட்டு நின்று வில்வளைத்து அம்பு தொடுத்தான்.

"கர்ணா. உன் பார்வைக்கு இப்பொழுது என்ன தெரிகிறது?"

"மரத்தின் கிளைகள் தெரிகின்றன. அதன் கிளை ஒன்றில் ஒரு குருவி வீற்றிருந்து தலையைத் தலையை ஆட்டுகிறது சுவாமி" என்றான் கர்ணன்.

"உம்-நடத்து பார்க்கலாம்."

குருநாதர் ஆணையிட்ட மாத்திரத்தே கர்ணனின் வில்லிலிருந்து அம்பு ஜிவ்வெனப் பறந்தது ஆனால்-இலக்குத் தப்பிவிட்டது.

இவ்வாறே தருமன் அசுவத்தாமன் வீமன் ஆகியோரும் குருநாதர் முன்னிலையில் வந்து வில்வளைத்து தங்கள் வித்தையை அரங்கேற்றினார்கள். அவர்களில் யாருமே மரத்தில் கட்டித் தொங்கிய இலக்கை எய்து வீழ்த்தத் தவறிவிட்டார்கள்.

"ஆகா என்ன அழகான புஷ்பங்கள் மலர்ந்திருக்கின்றன-பக்கத்திலே, அந்தமலர்களிலே வண்டுகள் மொய்த்துப்போயிருக்கின்றன" என்றான் தருமன்.

அசுவத்தாமனோ, வில்லில் அம்பு தொடுத்தபடி, "இலக்கு சக்கரத்துக்கு முன்னால்

(4-ம் பக்கம் பார்க்க)

19-11-66
வாரமலரில்
பெரி. சண்முகநாதன்
எழுதும்
'லதா'
என்னும் சிறுகதை
வெளியாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலேசியா தமிழாராய்ச்சி கருத்தரங்கம்

# சித்த ஆயுர்வேத சித்தமருத்துவம்

(டாக்டர் ஏ. கனகரத்தினம், ஏ. எம். ஏ. சி)

(சென்ற வாரத்தொடர்ச்சி)

## மேனாட்டு மருந்துகளும் சித்தமும்

தற்காலத்தில் மேனாட்டு விஞ்ஞானிகள் அடைந்துள்ள முன்னேற்றமே சித்த வைத்தியத்தின் பெருமைக்கு சான்று பகர்கின்றது. உடம்பிலுள்ள சுரப்பிகள், சிறுநீர், கொப்பூழ்க்கொடி, கருப்பை முதலியவற்றை ஆராய்ந்து மேனாட்டார் புதிய மருந்துகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். சிறுநீர் உபயோகம் சித்த வைத்தியத்துக்கே பிரத்தியேகமானது. தற்காலத்து மேனாட்டு வைத்தியர்கள் உபயோகிக்கும் சுரப்பி மருந்துகள் சித்த வைத்தியத்தில் ஏற்கனவே உள்ளன. ரோமரிஷி என்ற சித்தர் சிறுநீர், முதற்பிரசவத்தின் கொப்பூழ்க்கொடி (நஞ்சுக்கொடி), கருப்பைகள், 1-ம், 5-ம், 7-ம் மாத ஆண் சிசுக்கரு, செத்துப் பிறந்த தலைப்பிள்ளை, ஆகியவற்றைக்கொண்டு மருந்துகள் சரிக்கட்டுவதுபற்றிக் கூறியிருக்கிறார். இவற்றிற்கு சமானமான மேனாட்டுமருந்துகள் இப்பொழுது தயாரிக்கப்படுகின்றன.

பசு, ஆடு, செம்மறி, எருமை' யானை, குதிரை, ஒட்டகம், கழுதை, சிறுவர்-சிறுமியர், கர்ப்பிணிகள், ஆகியோருடைய சிறுநீரை சித்தர்கள் மருந்துகளில் உபயோகித்திருக்கிறார்கள். குடற்புழு, உடல் நோய்கள், வயிற்று வீக்கம், வாதம் பிடிப்பு, இரைப்பைக் கோளாறு, தோல் நோய்கள் முதலியவற்றுக்கு இம் மருந்துகள் கொடுக்கப்பட்டன.

சித்தர்கள் கையாண்ட பின்வரும் பதார்த்தங்களையும் மேனாட்டு ஆராய்ச்சியாளர்கள் உபயோகப்படுத்தலாம். புனுகு பூனையிலிருந்து கிடைக்கும் புனுகு, 1-ம், 3-ம், 5-ம், 7-ம் மாதத்தில் செத்துப்பிறந்த சிசு, திமிங்கிலத்தின் கரு மூலத்திலிருந்து கிடைக்கும் அம்பர், தம்பலப்பூச்சி (இந்திர கோபம்), வயல் நண்டு, முசுறுகளின்முட்டை, 'நாககிளிப் பூச்சி' என்ற மண்புழு, செழுத்தி மீன் ஈரல், நாகபாம்புவிடம் முதலியன. மான்கொம்பு, பன்றிக்கொம்பு, காண்டாமிருகக் கொம்பு முதலியவற்றை உலோகங்களுடன் சேர்த்து சித்தர்கள் மருந்துகள் தயாரித்தனர்.

## மந்திரம்

கடவுள்வழிபாட்டுக்குமட்டுமன்றி, நோய்களைத் தீர்ப்பதற்கும் உடம்பைத்தேற்றுவதற்கும் சித்தர்கள் கையாண்ட மந்திரங்கள் சித்த நூல்களில் காணப்படுகின்றன. சில எழுத்துகளையும் எழுத்துக் கூட்டங்களையும் திருப்பித்திருப்பி மனதிற்குள்ளோ அல்லது வாயினலோ உச்சரிப்பதை மந்திர உச்சாடனம் என்று கூறுகிறோம். குறிப்பிட்ட ஒரு சொற்கூட்டம் ஒரு மந்திரமாகிறது. இது மனிதவல்லமைக்கு அப்பாற்பட்ட ஒரு பெரும்சக்தியை எழுப்பவல்லது. வாயினல் உச்சரிக்கப்பட்டு, காதினல் கேட்கப்பட்டு, மனதினல் கிரகிக்கப்படும் நாதச்சேர்க்கை என்ற மந்திரம் ஒரு வித சிருஷ்டி எழுச்சியை உண்டாக்குகிறது சரிகமபதநி என்ற ஏழு ஸ்வரங்களை முறைப்பட இசை எழுப்பினல் எவ்வாறு பாம்புகளும் மிருகங்களும் அந்த ஒலிச்சேர்க்கைக்கு கட்டுப்படுகின்றனவோ அதுபோல மந்திர உச்சாடனத்துக்கு சில தேவதைகள் கட்டுப்படுகின்றன. மந்திரங்களைச் சொல்வதாலும் அவற்றைச் செபித்து அட்சரக்கூடு முதலியவற்றுள் அடக்கி தேகத்தோடு சேர்த்துக்கட்டுவதாலும் சித்தர்கள் பல நோய்களை அடக்கினர்கள்.

## யந்திரமும் மந்திரமும்

மந்திர உச்சாடனத்துக்கு ஒத்தாசையாக தேவதைகளை வழிபாடு செய்வதற்கு சில யந்திரங்களையும் சித்தர்கள் உபயோகித்தார்கள். உதாரணமாக ஆறு கோணம் கொண்ட இந்த 'ஷட்சக்கர யந்திரத்'தில் கண்களையும் மனதையும் லயிக்கவைத்து 'ஓம் சரவணபவ' என்ற மந்திரத்தை உச்சரித்துக்கொண்டு வந்தால் சுப்பிரமணியக்கடவுளை வாலாயம் பண்ணலாம்.

சொலமன் என்ற புகழ் பெற்ற எகிப்திய மன்னன் இதை உபயோகித்ததாகத் தெரியவருகிறது. அவன் அணிந்தமோதிரத்தில் இந்த யந்திரம் இருந்தது. ஆனல் மந்திர எழுத்துக்கள் இருக்கவில்லை. இஸ்ரவேல் தேசத்து யூதர்கள் இதை தங்கள் தேசிய முத்திரையில் பொறித்து வைத்திருக்கிறார்கள் எதியோப்பியா தேசத்தில் இதை மிக இரகசியமாக ஆதிகாலத்திலிருந்தே வழிபட்டு வந்தார்கள் என்று தெரியவருகிறது.

மற்றது 5 கோண நட்சத்திர வடிவமுள்ள பஞ்சாட்சர யந்திரம். இதிலுள்ள ஓம் நமசிவாய என்ற மந்திரத்தை ஜெபித்தால் சிவபிரானின் அருளைப் பெறலாம். கோயில் மூலஸ்தானங்களிலுள்ள ஆதிபீடத்தின் அடியில் இந்த இரண்டுயந்திரங்களும்வேறு யந்திரங்களும்

(5-ம் பக்கம் பார்க்க)

## பக்தியும் பணிவும்

இறைவனிடத்தில் வைத்த அன்பு காரணமாக தன்னைக் காட்டிலும் பெரியோர்க்குக் கீழ்ப்படியாதுஒழுகுதல்பாவம் ஆகாது. இராமனிடத்தில் தான் கொண்ட அன்பு காரணமாகப் பரதன் அன்னையின் சொல்லை மறுத்தான். கிருஷ்ணபக்தி பரிபூரணமாகப் பெற்றிருந்த கோபிகைகள் தம்கணவன்மார் வார்த்தைகளைப் பொருட்படுத்தவில்லை. பகவானிடத்தில் நிறைந்த பக்தியுடைய பிரகலாதன் தன் தந்தையின் பேச்சை மதிக்கவில்லை.

— ஸ்ரீராமகிருஷ்ணர்

வாணி விழாவினை முன்னிட்டு இலங்கை வானொலியில் நாவற்குழியூர் நடராஜன் நடாத்திய கவியரங்கில் கவிஞர்கள் பாடிய கலாதேவி அந்தாதியில் ஒரு பகுதி இது. நால்வர்- மகாகவி, இ. நாகராஜன், பா. சத்தியசீலன், தான்தோன்றிக்கவிராயர்- சேர்ந்து ஒருவர் பாவின் இறுதியை மற்றவர் பாவுக்கு ஆதியாக அமைத்துப் பாடல்கள் செய்ததை இக்கவியரங்கின் ஒரு புதுமையாக இருந்தது.

# கவிஞர் தெய்வம்

**1. மஹாகவி:**

காப்பிருகையில், வாட,<br>
காலிலே சிலம்பின் ஓசை<br>
கூப்பிட, காதில் மின்னும்<br>
குண்டலம் குலுங்க,<br>
அன்று<br>
தோப்பிடை நடந்தபோது<br>
தொடர்ந்தொரு<br>
சிறுமி வந்தாள்!<br>
''சாப்பிடு!'' என்று<br>
சொல்லித்<br>
தமிழிலே சில சொல்<br>
தந்தாள்

**2. இ. நாகராஜன்:**

தந்தனள் பாகைத் தேனைத்<br>
தமிழிசை என்றே கூட்டிச்<br>
சிந்தையில் இனிக்க; அந்தச்<br>
சிறுமிசெ புலவோர்<br>
நாவில்<br>
அந்தமோ டாதி யற்ற<br>
அறங்களை ஆக்கும்<br>
ஞானம்<br>
தந்தருள் வாணி யானவள்;<br>
தாழ்ந்துகை கூப்பி<br>
நின்றேன்.

**3. பா. சத்தியசீலன்:**

கூப்பிய கரத்தோடந்தக்<br>
குமரியை விளித்துச்<br>
சொன்னேன்!<br>
பூப்பயில் என்றன் நெஞ்சம்<br>
புதியதோர் வீணை!<br>
அஃதை<br>
யாப்புடன் மீட்டல்<br>
வேண்டும்!<br>
பாணர்மென் தமிழிற்<br>
சின்னக்<br>
காப்பு நான்பாட நீயே<br>
காவியம் தொடர்தல்<br>
வேண்டும்

**4. தான்தோன்றிக்கவிராயர்**

'வேண்டும்'' என்றிருகை<br>
கூப்பி<br>
விளங்கிய வரங்கள் கேட்டு,<br>
நீண்டதோர் முறுவல்<br>
செய்தே<br>
நேரிழை சொன்னுள்;<br>
''வாணு!<br>
தூண்டி உன் உளத்திற்<br>
பூம்பா<br>
துளிர்த்திடச் செய்யப்,<br>
பூவில்<br>
வேண்டிய துளதால்;<br>
என்னை<br>
வேண்டுதல் வீணே!''<br>
என்றுள்!

**5. மஹாகவி;**

''வேண்டுதல் வீணே!''<br>
என்றுள்,<br>
வீ ணையும் கையுமாக,<br>
பாண்டியர் இந்த நாட்டை<br>
ஆண்டநாள், அதற்கும்<br>
முன்னுல்,<br>
மூண்டெழுந் தலைகள் வந்து<br>
முடிக்குமுன் தொட்<br>
டெல் லாம், நீ<br>
குண்டான் டுகால மாக<br>
ஆடிய ஆட்டம் யாதோ?

**6. இ. நாகராஜன்:**

ஆட்டமும் ஆடி அன்பில்<br>
அவர்ந்தருள் ஆக்கம்<br>
பூக்கப்<br>
பாட்டுகள் பாடி நின்றாய்;<br>
பைந்தொடிக் கரத்தால்<br>
வீணை<br>
மீட்டிய மெய்மை நாதம்<br>
மின்னெடு மன்னி க்கக்<br>
காட்டியே களித்தே இன்பக்<br>
கவிதைகள் தருவாய்<br>
அம்மா.

**7. பா. சத்தியசீலன்:**

அம்மாளன் றென்னைக் கவி,<br>
அழுதனை 'கவிதா' என்றாய்!<br>
இம்மாதைப் பார்த்தும்<br>
இந்த<br>
இருக்கையைப் பார்த்தும்<br>
முன்னுள்<br>
தம்மால ஆன மட்டும்<br>
தமிழிலே அமுதா<br>
ரெல்லாம்<br>
செப்பமைசர் கவிஞர்<br>
ஆமோ?<br>
சென்றொழித்திட்டார்<br>
அன்றோ?

**8. தான்தோன்றிக்கவிராயர்**

''அன்றேதிச் சென்றார்<br>
பாடல்<br>
அனைத்திலும், அழகு கூர<br>
நின்றுடல பயின்றே னில்லை;<br>
நேர்த்திசால் புலவர்<br>
தன்னைக்<br>
கண்டதும் இந்த வையக்<br>
கவினுறும் காட்சி தம்மில்;<br>
எண்டிசை எங்கும் யானே<br>
எழிலளாய் இருப்பேன்''<br>
என்றுள்!

**9. மஹாகவி:**

எழில்ளவாய் இருப்பாய்<br>
என்ற<br>
எண்ணத்தால் தானே<br>
இன்றும்,<br>
பொழில்களில் மலரும்<br>
பூவில்,<br>
புன்னகைபுரியும் மாதர்<br>
விழிகளில், வானவில்லில்,<br>
வெற்றிடங்களிலே<br>
நீண்ட<br>
கிழக்களில்திரிக்கின்<br>
றூர்கள்-<br>
வீதியில் இறங்கல் அஞ்சி?

**10. இ. நாகராஜன்:**

அஞ்சியே ஆன்றோர் ஆன்ம<br>
அறநெறி பிறங்க என்னை,<br>
தஞ்சமென் றடைந்து<br>
போற்றி<br>
தரணியில் தழைந்து<br>
நின்றார்;<br>
செஞ்சொலால்சிறந்த அந்த<br>
செம்புலவோர்கள்<br>
பாவின்<br>
விஞ்சிய மெய்ம்மை மேவி<br>
வியந்துநாம் களித்தோம்<br>
நன்றே.

**11. பா. சத்தியசீலன்:**

நன்றென எடுத்துச்<br>
சொன்னும்<br>
நயமுடன் அறங்கள்<br>
தம்மை<br>
அன்று அறம்பாடியோரை<br>
அறவர்-செம்புலவர்<br>
என்றும்!<br>
சென்றதக் காலம்! இன்றே<br>
சேர்ந்தன புதிய தேவை!<br>
இன்றெதைப் பாடல்<br>
வேண்டும்<br>
என்பதே எனது கேள்வி!

**12 தான்தோன்றிக்கவிராயர்**

''கேள்வி ஞானத்தை<br>
வைத்தும்,<br>
கீழ்மைகள் பொதிந்தும்,<br>
பண்மை<br>
வேள்விசெய் தழித்தும்,<br>
பாடல்<br>
விளைந்திடல் வேண்டாம்;<br>
சாதி,<br>
ஏழ்மை, பல் மொழி, மதம்<br>
தாழ்<br>
வேற்றும், போர்,<br>
அகற்றி-மாந்தர்<br>
வாழ்வினை உயர்த்தும்<br>
பாடல்<br>
விளைகுவை'' என்றுள்<br>
வாணி!

# சிறுகதை (5ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு கிளை நீட்டிக்கொண்டிருக்கிறதே, அந்தக் கிளையைத் தொளைத்து அதற்கூடாக அம்பைச் செலுத்தவா?'' என்று கேட்டான். வில்லேந்திய கையனுக நின்ற வீமசேனன் 'அந்த காட்டு விருட்சத்தை என் ஒரு கையால் வேருடன் பிடுங்கிவிடுவேனே, குருநாதா'' என்று தோள் கொட்டி ஆர்ப்பரித்தான்.

இவர்களுக்குப் பிறகு அர்ச்சுனன் முன்வந்தான்.

''அர்ச்சுனு உன்னுல் இலக்கை வீழ்த்த முடியுமா?'' துரோணச்சாரியார் அவனிடம் கேட்டார்!

''முயன்று பார்க்கிறேன் குருநாதா''

அர்ச்சுனன் குருநாதர் முன்னிலையில் வில்வளைத்து அம்பு தொடுத்து இலக்கு வைத்தான்.

''அர்ச்சுனு, உன் கண்களுக்கு இப்பொழுது என்ன தெரிகிறது?''

''அந்த இலக்கு வட்டம் மட்டுமே தெரிகிறது குருநாதா. வேறெதும் கண்டிலேன்.''

துரோணச்சாரியாரின் முகம் மலர்ச்சியுற்றது.

''சரி நடத்து. அம்பு பறக்கட்டும்.''

குருநாதரின் ஆணைக்கு முன்னமே அம்பு விறற்று எழுந்து பறந்தது. தூரத்தே மரக்கிளைகளின் நடுவே கட்டிவைத்த இலக்கு வட்டம் 'டமார்' என இரண்டாகப் பிளந்து உடைந்து வீழ்ந்தது.

ஃ ஃ ஃ

பாட்டி கதையை முடித்துவிட்டு 'ஐயோ கால் விறைச்சுப்போச்சு' என்று தன் கால்களை ஒருக்கால் நீட்டி மடக்கிஞள்.

வட்டுக்கோட்டை அடியார் கூட்டத்தின் பஜனை எங்களுக்குப் பின்னே வெகு தொலைவாக கேட்கிறது.

என் முன்னுல் மாடுகளுக்கு சோர்வு அகற்ற வண்டியின் நுகத்தடியில் வேலுப்பிள்ளை கட்டிவிட்ட பச்சைக் குழை மங்கிய நிலவொளியில் சந்நிதியில் தோகை சிலிர்த்தெழும் பச்சை மயிலாகச் சுழன்றுடுகிறது என் கண்களுக்கு. அந்தப் பூவரசுக் குழைக்குள் மறைந்திருந்து அடிக்கொருக்கால் வெளியே தலை நீட்டும் அதன் வெண் மலரோ கோழிக்குஞ்சுப் பொம்மையாக அழகு காட்டுகிறது

அதுதான் சொன்னேனே, எனக்கு வயது ஐந்தோ அல்லது ஆறோதானிருக்கும் அப்பொழுது.

இந்த இலட்சியம் குறிக்கோள் என்பதெல்லாம் காலத்துக்குக் காலம் பருவத்துக்குப் பருவம் மாறிக்கொண்டேவருவது தானே!

நாம்புறப்பட்டுவந்தஇடம் —ஆரம்பமே இன்று மறந்து போய்விட்டது. படிக்கும் புத்தகத்துக்குள்ளே மயிலிறகு தேடி எடுத்துவைத்த 'பாலர் வகுப்பு' இன்று நமக்குப் பின்னே எவ்வளவோ தூரத்தில் போய் நிற்கிறது. அதன்பின், ஆடும் மயிலில் முருகப்பெருமான் தன் இச்சா சக்தி கிரியா சக்தியுடனே உலாவருவதாகச் சித்தரித்த ஓவியங்களையும் சிற்பங்களையும் [illegible] கோவில் உற்சவ சாத்துப்படியையும் பார்த்துக் கையெடுத்த நாளில் அந்த மாதிரி ஒரு கோலமாமயில் ஊர்தியிலே வள்ளி தெய்வானையுடனே வீற்றிருந்து மலைக்கு அறுபது மைல் வேகத்தில் பறக்கவேண்டும், ஜாம்ஜாமென்று ஊர்வலம் விட வேண்டுமென்றெல்லாம் ஓர் இலட்சியம், கனவு கிலகாலமாக.

கோழிக்குஞ்சு பொம்மை மேலிருந்த ஆசை அது வாங்கிய இரண்டாம் நாள் அதை உடைத்து உள்ளே அடைத்திருந்த பஞ்சையும் பருத்தியையும் பார்த்த மாத்திரத்தே, போச்சு— போயே போச்சு.

அதற்குப்பின், இன்று வரை, நீல வான்வெளியிலே மகத்தாக மிதந்து செல்லும் வெண் முகில் அன்னைந்து பார்த்தவனுய்நிற்கிறேன்— சே சே! நாம் இன்னமும் [illegible]

(அடுத்த இதழில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களே!

10-வது இதழ்

# அறிவொளி

வெளிவந்து விட்டது.

- விஞ்ஞான ஆராய்ச்சிக்குத் தாய் மொழி தடையா?
- ''வாக்குண்டாம்''- செய்யுளில் வைத்தியக் குறிப்புகள் பொதிந்துள்ளனவா?
- ''நுவரேலியாப் பகுதியில் காடுகள் அழிக்கப்படுவதால் மழை வளம் குறைகின்றது'' —பத்திரிகை நிருபர் ஒருவரின் இச் செய்தியின் விளக்கம் யாது?
- மண் எண்ணெய் விளக்கை நோக்கி ஊதினல் ஏன் அணைகின்றது? விறகு தணலில் ஊதும் போது ஏன் சுவாலையுடன் எரிகின்றது?
- சினிமா ஒளிப்படச் சுருளில் எப்படி ஒலிப்பதிவு செய்யப்படுகின்றது?
- அலுமினியத்தின் முக்கிய குணவியல்புகள் யாவை?
- மூலக்கூறுகள் பற்றிய கோட்பாடு எவ்வாறு தோன்றியது?

இக் கேள்விகளுக்கான விடையை
அறிவொளியிற் காணுங்கள்

தொடர்புகள்:
செயலாளர்
''அறிவொளி''
35/9, யோசேப் ஒழுங்கை
கொழும்பு-4.

ஆண்டுச்சந்தா ரூ 7/-

தனிப்பிரதி சதம் -/60


1374

# தமிழில் விஞ்ஞானம்-கருத்தரங்கம்

தமிழில் விஞ்ஞானம் ஆரம்பக் கல்விமுதல் ஆராய்ச்சிக் கல்வி வரை – எனும் சிறந்த கொள்கையை நடைமுறையில் கொண்டுவருவதில் ஈழம் இன்று முன்னோடியாக நிற்கின்றது. இக்கால கட்டத்தில் பல பிரச்சினைகள் இத்துறையிற் தோன்றலாம்; இவற்றை எதிர்நோக்கி, வெற்றியுடன் தீர்வுகாணும் முகமாக அவ்வப்போது கருத்தரங்குகள் நடைபெறுவது அவசியம். இத்தகைய கருத்தரங்கத்தைத் தொடக்கிவைப்பதில் முன்னோடிகளாகத் திகழ்கின்றது ''தமிழில் விஞ்ஞானக் கல்வி விருத்திக்கான நிறுவகம்'. அறிவொளி எனும் விஞ்ஞான மாத சஞ்சிகையை இந்நிறுவகத்தினர் வெளியிடுவதை நாம் அறிவோம். வடமாகாண விஞ்ஞான ஆசிரியர் சங்கம்-தமிழில் விஞ்ஞானக் கல்வி விருத்திக்கான நிறுவகம் ஆகிய இரு ஸ்தாபனங்களின் கூட்டு முயற்சியாக தமிழில் விஞ்ஞானம் பற்றியதொரு கருத்தரங்கம். 1967-ம் ஆண்டு ஜனவரி மாதம் 17, 18-ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெற இருக்கின்றது. யாழ்-மத்திய கல்லூரி மண்டபத்தில் கருத்தரங்கம் நடைபெறும்; கலைச் சொல்லாக்கம், பாட நூல்கள், துணை நூல்கள் பிரசுரம், விஞ்ஞானக் கல்வியில் ஆங்கிலத்தின் இடம், விஞ்ஞானக்கல்வியை ஜனரஞ்சகப்படுத்தல் எனும் பொருள்கள்பற்றி அவ்வத் துறைகளில் ஈடுபாடுள்ள அறிஞர்களின் ஆய்வுக் கட்டுரைகள் இடம் பெறும். இத்துறையில் ஆர்வமுள்ள பொதுமக்களும் கருத்தரங்கத்தில் பங்குபற்றும்படி அழைக்கப்படுகின்றனர். மேலும் விபரங்கள் வேண்டின் பின்வரும் முகவரிகளிற் தொடர்பு கொள்ளலாம்.


தி. கணேசன்,
பணிமுறை செயலாளர்,
த. வி. க. வி. நி,
35/9 யோசேப் ஒழுங்கை,
கொழும்பு-4.

ஜே. எம். அரியரத்தினம்,
தலைவர்,
வ. மா. வி. ஆ. ச.,
மத்திய கல்லூரி,
யாழ்ப்பாணம்.


மற்றவர்களை
முந்திச் செல்ல

BSA

பி. எஸ். ஏ.
கோல்டின் டி லக்ஸ்
ரேட்ஸ்டர் சைக்கிள்களையே
தெரிவு செய்யுங்கள்



- உலகிலேயே மிகச் சிறந்த சைக்கிள்
- நீடித்த உறுதி வாய்ந்தது
- வசதிக்குச் சாதகமான அமைப்பு
- 'டெரி-டைப்' சீட்டுகள்

துரிதமான பாதுகாப்பான ஓட்டத்துக்கு
ஒரு பி. எஸ். ஏ. யில் செல்லுங்கள்

ஏகவிநியோகஸ்தர்கள்:

கார்கில்ஸ் (இலங்கை) லிமிடெட்


## சித்த ஆயுர்வேதம்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

புதைக்கப்பட்டிருக்கின்றன. உலோகப் பொருட்களையும் தாதுப்பொருட்களையும் கொண்டு சித்தர்கள் பல மருந்துவகைகளைத் தயாரித்தனர்.

### மறைவு

சித்தர்களும் அவர்களுடைய நூல்களும் இக்காலத்தில் பெரும்பாலும்மறைந்துவிட்டன. பரம்பரையாக சித்த வைத்தியம் செய்தவர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட சில நூல்கள் இப்பொழுதும் இருக்கின்றன. ஆனல் இவை உண்மையான தகுதியுள்ளனவல்ல. ஆனல் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிவதற்கு இன்னும்பலஆதாரப் பொருட்கள் இருக்கின்றன. இவற்றை இந்திய அடங்கலும் பிரான்ஸ், ஒல்லாந்து, ஜேர்மனி, பிரிட்டன் முதலிய இடங்களிலும் காணலாம். தஞ்சாவூர் சரஸ்வதி மஹால் நூல் நிலையத்திலும் சென்னை கீழைத்தேச நூல்நிலையத்திலும் நூற்றுக்கணக்கான சுவடிகளும் ஓலைகளும் இருக்கின்றன. இவற்றைத் தவிர தென்னிந்தியாவிலும், இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் பரம்பரை வைத்தியர் வீடுகளில் ஏராளமான சுவடி நூல்கள் இருக்கின்றன.

ஆயும் பிடித்து கண்டிப்போன கரங்களால் எழுதப்பட்டிருக்கவேண்டும். ஆகை பால் அனுபவம் என்றஅடித்தளம் இதற்கு அமைந்திருக்கும். பொது விவசாயத்தைப்

இவற்றை வைத்தியர்களும் பண்டிதர்களும் கொண்டஒருகுழுஆராய்ந்து போலிகளை அகற்றி உண்மையானவற்றைவிளங்கக்கூடிய தமிழில் எழுதி அச்சிட்டால் சித்த வைத்தியம் புத்துயிர் பெறுவதற்கு உதவியாகும்.




விவசாய விளக்கம் (1-ம் பாகம்), ஆக்கியோன்: திரு. இராமுப்பிள்ளை சங்கரப்பிள்ளை, இறம்பைக்குளம், வவனியா.

சுமார் 38 ஆண்டுகளாய் விவசாயத்தில் ஈடுபட்டவன் என்று ஆசிரியர் கூறுதலால் இந்நூல் ஏரும் மண்வெட்

[மதிப்புரை வேண்டுவோர் ஒவ்வொரு புத்தகத்திலும் இரு பிரதிகள் அனுப்ப வேண்டும்]

பற்றி இரண்டு அத்தியாயங்களும், நெல், மிளகாய், வெங்காயம், தக்காளி, புகையிலை, பம்பாய் வெங்காயம், நிலக்கடலை ஆதியன செய்தலைப் பற்றி ஏழு அத்தியாயங்களும்கொண்டது, 51 பக்கம் கொண்ட இச்சிறு நூல்.

ஒரு விவசாயிதன் சொந்த அனுபவங்களை வடிகட்டி யெடுத்து மற்றவர்களும் பயன் பெறவேண்டுமென்ற விழுமிய நோக்குடன் எழுந்தது இந்நூல். இது கிடைக்குமிடம், இதன் விலை முதலியன குறிப்பிடப்படாதிருப்பதே இது வியாபார நோக்குடனன்றி சேவை நோக்குடன் எழுதப்பட்டிருக்கிறதென்பது தெரியவருகின்றது. முழுக்க முழுக்க வியசாயத்தில் ஈடுபட்ட ஒருவர் விவசாயத்தைப்பற்றி எழுதுவதை இப்பொழுது தான் முதன்முதலாக கண்டிருக்கிறேன். இத்தகைய படைப்புகளுக்கு எவ்வளவு தான் உற்சாகம் அளித்தாலும் தகும்.

'சென்ற உலக யுத்தங்கள் நடந்தபோது நாங்கள் ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்தோம். தாய்க்கோழி எவ்வளவு கஷ்டம் வந்தாலும் அது தன் குஞ்சுகளைக்காப்பாற்றுவதுபோலஅச்சமயம் ஆங்கிலேயர் ஆட்சி எம்மைக் காப்பாற்றிவந்தது. இப்பொழுது அப்பேர்ப்பட்ட ஒரு யுத்தம் வந்தால் மண்ணெண்ணெய்க்கும் மெஷினுக்கும் ட்ராக்டர் உதிரிப்பாகங்களுக்கும் என்ன செய்வோம்?' என்று தர்க்கித்து கால்நடை வளர்ப்பை நாம் கைவிடப்படாதென்று ஆசிரியர் எடுத்துக்காட்டும் போது ஓர் உண்மையான விவசாயியின் குரல் கேட்கிறது.

நெற்பயிர் நன்ருய்விளைந்த பின் தாள்கள் காய்ந்தபின் வெட்டி அடுக்கிஏறக்குறைய பதினைந்து நாளைக்குப் பின் நெல்லை வேருக்கி ஐந்து நாளைக்கு வெய்யிலில் நன்ருகக் காயவைத்துவைக்கோல் தாளினல் சுவர்கட்டி நாலு பக்கமும் காற்ருேட்டமான பரண்மேல் வைத்து வைக்கோலினுல் கயிறு செய்து சுற்றி அதில்நிரப்பி, காய்ந்த வைக்கோல் ... அதை வைக்கோலால் மூடி

(6-ம் பக்கம் பார்க்க)


" லேடன் " LEYDEN

தயாரிப்புகள்:-

- பெனியன்
- ஸ்போட் சேட்
- ரீ சேட்
- ரெறி சேட்
- ரெறி பிளவுஸ்
- பேபி வெஸ்ட்
- ரால்மேஸ் (Nylon & Cotton)

லேடன் காமென்ஸ்

74 A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

போன்: 330



## சைக்கிள் பந்தய ஓட்டம்

ஈழநாடு நடத்தவிருக்கும் சைக்கிள் பந்தயஓட்டத்தில் பி. எஸ். ஏ. சைக்கிள்கள் மட்டும்தான் பங்கு கொள்ளலாம். யாழ்ப்பாணத்தில், பல்வேறு பகுதிகளிலும் மாதாமாதம், சைக்கிள் பந்தய ஓட்டங்கள் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன என்பதை வாசகர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிருேம். பந்தயத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள், பி. எஸ். ஏ. சைக்கிள் ஒன்று உங்கள் வசம் இருக்கின்றதா என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்.

பந்தயத்தில் பங்கு பற்றுவதற்கான கூப்பனகள் வெகுவிரைவில் தினமும் ஈழநாடு பத்திரிகையில் வெளிவரும். இக்கூப்பன்களில் மட்டும் தான் நீங்கள் விண்ணப்பிக்கலாம்.

மறவாதீர்கள்

முதற் பரிசு

பி. எஸ். ஏ. சைக்கிள்.


284

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் இராசி பலன்

## எழுதுவது சோதிட ஆசான் செ. தெல்லியூர்

Colombo Studio

(11—11—66 — 18—11—66)

### மேட இராசி

செய்தொழில் கஷ்டம், வயிற்றில் ரோகபீடை, வீண் பழிச்சொல் கேட்டல், நிலைகேடு, இனபந்து இலேசம், புத்திரரால் கஷ்டம், கலகம், சேதம், ரோகபீடையால் பணச்செலவு, களத்திர வழிக் கஷ்டம் காணல், காரணமற்ற மனப்பயம், சோகம், உத்தியோகத்தில் நன்மை, வர்த்தகத்தில் மத்திம பலிதம், மாணவருக்கு கல்வித் தடை, பெண்களுக்குப் பணக்கஷ்டம், வீண் அவமானச் சொற் கேட்டல் ஆதியன உண்டாம்.

### இடப இராசி

செய்காரிய நஷ்டம், இனபந்துக்கள் விரோதம் தய் வழிக் கஷ்டம், புத்திரரால் இலாபம், நற்பலன் கிட்டல், எதிரிகள் வீழ்ச்சி, திரவியலாபம், இலட்சுமீகரம், வர்த்தகத்தில் இலாபம் கிட்டல், பொருள் கொடுக்கல்-வாங்கலினால் அவமானம் நேரல், உத்தியோகத்தில் அதிகாரிகள் பகை, மாணவருக்கு கல்விச் சிறப்பு, பெண்களுக்கு குடும்ப சச்சரவு, பணமுடை உண்டாம்.

### மிதுன இராசி

பணவரவு, குடும்பசுகம், செய்தொழில் சிறப்பு, திரவியலாபம், எதிர்பாராத பொருள் சேர்க்கை, எதிரிகள் வீழ்ச்சி, போசன சுகம், இனபந்துக்கள் கூட்டம், சுபகரும கொண்டாட்டம், புத்திரரால் கஷ்டம், ரோகபீடையும் பணச்செலவும், நினைத்தவை கைகூடாமை, உத்தியோகத்தருக்குச் சிறப்பு, வர்த்தகம் பலிதம், இலாபம் கிட்டல், மாணவருக்கு கல்விச் சிறப்பு.

### கடக இராசி

இனபந்துக்கள் விரோதம், குடும்ப சச்சரவு, பொருள் அழிவு, ரோகபீடை, செய்தொழில் நஷ்டம், இனபந்துக்கள் விரோதம், மாதுர உதவி, தாயாதிகள் கலகம், வம்பு-வழக்கு, உத்தியோகத்தருக்கு அதிகாரச் சிறப்பு, சந்தோஷம், பதவி மாற்றம், வர்த்தகருக்குப் பண நஷ்டம்.

### சிங்க இராசி

நிலைக்கேடு, இடமாற்றம், களத்திரசுகம், தனதானியச் சிறப்பு, பிரயாணக்கஷ்டம், நன்மை இடையிடையுண்டாதல், காரணமற்ற மனப்பயம், களத்திரத்திற்கு இடையிடை கஷ்டம், உத்தியோகத்தருக்கு நற்பயன், வர்த்தகருக்கு மத்திமசுகம்.

### கன்னி இராசி

பெண்களால் நன்மை, போகசுகம், பொருள்வரவு, குடும்பத்தில் துக்க சம்பவம் நடத்தல், மனச் சஞ்சல, வாக்கினால் கஷ்டம், சகோதரவழி இலாபம், இளைய சகோதரத்திற்கு ரோகபீடை, இடையிடை ரோகபீடை, வர்த்தகருக்கு தொழில் மந்தம், மாணவருக்கு கல்விச்சிறப்பு.

### துலா இராசி

சூட்டுரோகம், வீண் அவமானம், பெண்களால் சுகம், இலாபம், கீர்த்தி, தொழில் நட்டம், நிலைகேடு, களத்திர ரோகபீடை, புத்திரரால் நன்மை, வர்த்தகத்தில் சமபலன், புதிய தொழில்களில் ஈடுபாடு, உத்தியோகத்தருக்குப் பொறுப்பு அதிகரிப்பு, அதிகாரிகள் பகை.

### விருச்சிக இராசி

செய்காரியநட்டம், தேக அசௌக்கியம், பிணி, மனத்துயர், அதிகசெலவு, போசன சயன சுகம், பெண்களால் உதவிகிட்டல், புத்திரரால் குடும்பகலகம், எதிர்பாராத உதவி பிறவழியில் கிட்டல், உத்தியோகத்தருக்கு இடமாற்றம், அதிகாரச்சிறப்பு, பொறுப்புகள் அதிகரிப்பு, பெண்களுக்கு சுபபலன்கள் காணல், மாணவருக்கு கல்விச் சிறப்பு ஆதியன காணப்படும்.

### தனு இராசி

மனவியாகூலம், செய்காரிய பங்கம், இடர் எதிர்பாராது விழைதல், வீண் அவமானம், பெண்களால் கஷ்டம், சகோதரவழி நன்மை விருத்தி, சந்தோஷம், உத்தியோகத்தருக்கு சுபகாலம். வருமானமதிகரிப்பு, வர்த்தகருக்குத்தொழில் விருத்தி, பொருள் வரவு, மாணவருக்குக்கல்விச்சிறப்பு, பெண்களுக்கு குடும்பசுகம், களத்திரவழி நன்மை, சிறப்பு.

### மகர இராசி

ரோகபீடை, குடும்பத்தில் கஷ்டம், செய்தொழில் நஷ்டம், பிதாவழி பணஉதவி கிட்டல், பெண்களால்சுகம், பிரயாணக்கஷ்டம், வண்டி வாகன விபத்து, உத்தியோகத்தருக்கு தொழில்வெற்றி, அதிகாரிகள் ஆதரவு, வர்த்தகத்தில் இலாபம் கிட்டல், மாணவருக்குகல்விச்சிறப்பு, பெண்களுக்கு சமசுகம், குடும்ப சுகம் உண்டாம்.

### கும்ப இராசி

நிலைகேடு, மனத்துயர், இனபந்துக்களால் கஷ்டம், சகோதரவழிஇலாபம், களத்திரத்திற்கு ரோகபீடை, கஷ்டம், பெண்களால் இன்ப சுகம்கிட்டல், நிலைமாறுதல், பிதாவழி எதிர்பாராத இடையூறு, உத்தியோகத்தருக்கு இடமாற்றம், தாரபுத்திர கஷ்டம், பணமுடை, வர்த்தகருக்கு மத்திம பலிதம்.

### மீன இராசி

குடும்பத்தில் ரோகபீடை, பணமுடை, பிணி, அதிக செலவு, பெண்களுக்கு ரோகபீடை, புத்திரரால் இலாபம், கீர்த்தி, இலட்சுமீகரம், சுகம்கிட்டல், பெண்களுக்கு குடும்பத்தில்நற்பலன், வர்த்தகருக்கு தொழில்விருத்தி, பொருள் வரவு, உத்தியோகத்தருக்குச்சிறப்பு. மாணவருக்குக்கல்வித்திறன் பிரகாசித்தல்.



சிங்களப் பேச்சு வன்மைப் போட்டியில் பரிசுபெற்ற தமிழ் மாணவி செல்வி ஜயந்தி மகாதேவா உள்நாட்டு அமைச்சர் டாக்டர் தகநாயகாவிடம் அப்பரிசைப்பெற்றுக்கொள்ளும் பெருமைமிகு காட்சியைத்தான் படத்தில் காண்கிறீர்கள். காலி வாலிகை மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற சிரேஷ்ட வகுப்பு மாணவர் பேச்சுப்போட்டியில் விசேட திறமை காண்பித்து முதன்மை பெற்ற ஜயந்திக்கு வயது 14 தான். இவர் காலி மெர்க்கன்டைல் வங்கியைச்சேர்ந்த திரு. என். மகாதேவாவின் புதல்வியாவார்.

## நமது நூல் நிலையம்

(5ம் பக்கத் தொடர்ச்சி)

வீடு ஒன்று சரிப்பண்ணி மழைத்தண்ணீர் படாதபடி மூடிவைத்து நாலு மாதத்திற்கு ஒரு தடவை மூன்று நாள் வெய்யிலில் காய வைக்கவேண்டும்- இவ்விதம் ஆசிரியர் விதைநெல்லுக்கு பாகம் கூறுவது அவரது பழமையில் ஊறிய அனுபவத்தைநன்கு எடுத்துக்காட்டுகிறது.

விவசாயம் செய்வோர் எல்லோரும் இந்நூலைப் படிக்கவேண்டியது அவசியம். இதைப்போல மட்டக்களப்பு, மன்னார், யாழ்ப்பாணம் முதலிய இடங்களிலுள்ள விவசாயிகளும் தங்கள் அனுபவங்களை நூல் வடிவமாக்கின் அது பலருக்கும் பயன்படும்.

—சி. என். பி

## வரப்பெற்றோம்

கலைவாணி வெண்பா மாலை—(இலவச வெளியீடு) ஆசிரியர்: சர்வானந்தன். கடைக்குமிடம்: தமிழ் மன்றம், இணுவில்.

ஃ

மல்லிகை— (வேந்தனார் ஞாபகார்த்த இதழ்) ஆசிரியர்: டொமினிக் ஜீவா. விலை சதம்: 30.

ஃ

பாவையின் பரிசு— ஆசிரியர்: துரை. மனோகரன். விலை ரூபா 2-50.

ஃ

மாணவநேசன்— (கன்னி மலர் 1966) ஆசிரியர்கள்: த. தங்கவேல், தியாகமார்க்கண்டு, அ. தேவராஜா.


**இளம்பிறை அக்டோபர்1966** ஆசிரியர்: எம். ஏ ரஹ்மான் கிடைக்குமிடம்: 231, ஆதிருப்பள்ளித் தெரு, கொழும்பு விலைசதம்: 30

**கதிரொளி கலைவிழாசிறப்பு** வெளியீடு 1966. ஆசிரியர்: திரு. கா. நடராசா பீ. ஏ. கிடைக்குமிடம்: கிழக்குப் பிரதேச சனசமூக நிலைய சம்மேளனம், மட்டக்களப்பு விலை: 1 ரூபா.


ஒரு பிரபலமான டுப்பிளிகேட்டறின் பிரபலமான மொடல் சகாயமான விலைக்கு உண்டு

REX-ROTARY

M2



எம்2 — விசேஷ அம்சங்கள்

காகிதங்கள் வைக்கும் பெட்டியில் 250 காகிதங்கள் வைக்கலாம். தபால் அட்டையிலிருந்து முழு அளவுக் காகிதம் வரையான எந்த அளவுள்ள காகிதத்திலும் பிரதிகள் எடுக்கலாம்.

உயரம், ஓரம் ஆகிய நிர்ணயங்களை இலகுவில் செய்யலாம். விரும்பிய விதத்தில் ஒழுங்கு செய்யக்கூடியது. ஸ்டென்சில் வெட்டுகள் செய்யக் கூடிய வகையில் சரி செய்யலாம்.

கௌண்டரில் நான்கு இலக்கங்கள் உண்டு. விரும்பினால், ஒற்றைக் கணக்கை மாற்றி சைபர் ஆக்கக்கூடிய வசதியும் செய்யப்பட்டுள்ளது. இது எடுக்கும் பிரதிகளின் எண்ணிக்கையைச் சரியாகக்கணக்கிடுகிறது. இயந்திரம் இயங்காதிருக்கும்போது கிராங்கின் சுழற்சிமுறை மாற்றுப் பொறி சுழற்சி எண்ணிக்கைகளை இது கணக்கிடுவதில்லை.

இத்தனை சிறப்பு வாய்ந்த அம்சங்களுடன் கூடிய எம்—2 இன் விலை குறைவானதே. பாவிக்கும்போதும் அதிக செலவு ஏற்படுவதில்லை. இதனால்தான் எம்—2 இன் விலைக்கு அது விரைவில் நல்ல சேவைபுரிகிறது.

எம்—2 மாத்திரம் இன்னும் அதிகம் கூறலாம் உங்களுக்குக் கஷ்டமின்றி எவ்வளவுதூரம் அது சேவை செய்யும என்பதை நீங்கள் அறிய வேண்டும். தொலைபேசி மூலம் அல்லது கடிதம் மூலம் எம்முடன் தொடர்புகொண்டால், எம்—2 வேலை செய்யும் விதத்தை உங்களுக்கு உங்கள் காரியாலயத்திலேயே காண்பிப்பதில் மகிழ்ச்சியடைவோம்.

விரைவில் இறக்குமதி செய்யப்படவிருக்கிறது.

ஆபீஸ் இக்கியுப்மெண்ட் லிமிட்டெட்
(OFFICE EQUIPMENT LTD.)

ஜல்லண்ட் கட்டிடம், கொழும்பு—3.
தொலைபேசி: 6168
தந்தி: ஆபீஸ் எவிட்ஸ்



சலக்கழிச்சல்

தோல்சம்பந்தமான சொறி, சிரங்கு, தேமல், கரப்பன் முதலியன குணப்படுத்த உத்தரவாதம்.

சச்சிதானந்தா வைத்தியசாலை

மித்திரன் அம்பாள் கோவிலடி, துன்னாலை வடக்கு. கரவெட்டி P. O.






சென்ற். அந்தோனிஸ் குறூப்
516, ஸ்கினேஸ் வீதி, தெற்கு, கொழும்பு—10.
டெலிபோன்: 4261
4262.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

அரசாங்க கேள்விப்பத்திரங்கள்
நீர்ப்பாசனத் திணைக்களம்

என் 2862- யாழ்ப்பாணம் உப-பிரிவிலுள்ள இரணைமடுவிலுள்ள அழகாத்தினம் தெருவுக்கு 2ம் கட்டையிலிருந்து 6ம் கட்டைவரைக்கும் கற்கள் குவித்தலும், அதோடு பெரும் குவத்தில் 240 அடி "சி.ஓ. ஸ்பில" கட்டுதல்.

பொது வேலைத் திணைக்களம்

என் 2885- மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் மேலதிகமான வேலைகளும், திருத்தங்களும் செய்தல். கேள்விகள் முடிவு திகதி 30.11.66.

இதன் முழு விபரங்களுக்கும் 10.11.66-இல் வெளியான அரசாங்க வர்த்தமானியின் 1ம் பகுதி, 11ம் தொகுதியை பார்க்கவும். இதன் பிரதிகளைச் சகல கச்சேரிகளிலும், பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் கந்தோர்களிலும், தபாற்கந்தோர்களிலும், உப தபாற் கந்தோர்களிலும், புகையிரத நிலையங்களிலும் பார்வையிடலாம். 590

## அச்சுவேலி கிறிஸ்தவ கல்லூரி
## புதுப்பிரவேசர்

pre. S. S. C. வகுப்பில் 15 காலி ஸ்தானங்கள் உள. விண்ணப்பிக்க விரும்புவோர் 21-11-66 திங்கட் கிழமைக்குள் விண்ணப்பங்களை பாடசாலைக்கந்தோரிலே சேர்க்கவேண்டும். விண்ணப்பதாரிகட்குப் பிரவேசப் பரீட்சையைப்பற்றி அறிவிக்கப்படும்.

அதிபர்.

1372

REGAL—JAFFNA
NOW SHOWING
Elizabeth Taylor
Richard Burton
in
SANDPIPER
(Adults)

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
ஓய்வு தினங்களில் 4 காட்சிகள்
ரஞ்சன் — வசுந்தராதேவி
நடித்த
மங்கம்மா சபதம்
(புதிய கொப்பி)

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
எம். ஜி. ஆர். — சரோஜாதேவி
நடித்த
எங்கவீட்டுப்பிள்ளை

யாதவா
(மூளாய்)
தினசரி 6-30, 9-30
விடுமுறை நாட்களில் 2-30 மணி
எம். ஜி. ஆர். — சரோஜாதேவி
நடித்த
எங்கவீட்டுப்பிள்ளை

## உலக மேடை

(2-ம் பக்கத் தொடர்ச்சி) என்ற கேள்வி எழுவதற்கு இடமுண்டு.

கிளர்ச்சியும் ஆர்ப்பாட்டமும் ரயில் போக்குவரத்துச் சேவையை வெகுவாகத் தண்டித்துவருகிறது. இதனால் மட்டும் ஒரு நாளுக்கு ஐந்து லட்சம் ரூபாய் அரசாங்கத்துக்கு நஷ்டமேற்படுகிறதாம். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் உருக்காலை நிறுவ நிதி வசதியில்லாதது மட்டுமல்ல, ஆர்ப்பாட்டம், கிளர்ச்சி ஆகியவைகளால் ஏற்படும் நஷ்டத்தைப் பார்க்கும்பொழுது ஐந்தாவது திட்டத்திலும் கூட உருக்காலை நிறுவ முடியுமா என்பது சந்தேகமே. இந்திய மக்கள் சிந்திக்கும் திறனுள்ளவர்கள். அரசியல், சிந்தனைக்குத் தடை போட்டு விட்டதா?

மகாத்மா தியேட்டர்
(தெல்லிப்பழை)
தினசரி 6-30, 9-30
போயா தினங்களில் காலை 10 மணி
சிவாஜி—சாவித்திரி
நடித்த
திருவிளையாடல்
பிரதமரின் யாழ்ப்பாண
விஜயமும் காண்பிக்கப்படும்

## இந்த வாரம்

சனி-தமிழ் நாடகத் தலைமை ஆசிரியர் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் நினைவு தினம், கேதார கௌரிவிரதம்.

ஞாயிறு- கந்த சஷ்டி விரதாரம்பம்.

திங்கள்- ஜவர்ஹர்லால் நேரு பிறந்த தினம், எழுத்தாளர் "இலங்கையர்கோன்" நினைவு தினம்.

புதன்- பாஞ்சாலசிங்கம் லாலா லஜபதிராய் தினம்.

வியாழன்- கப்பலோட்டிய தமிழர் வ. உ. சி. நினைவு தினம்.

வெள்ளி- சேர். பொன். இராமநாதன் குருபூசை.

## இன்று

சண்டிலிப்பாய் ஸ்ரீநாக பூசணி அம்மான் கோவிலில் மாலை 6.30 மணிக்குச் சிவதொண்டர், வித்துவான் திரு. கே. கே. நடராஜன் 'இல்லையே என்னுதை இயற்பகையார்' என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

## சூல, வேல் . . .

(VIம் பக்கத் தொடர்ச்சி) விட்ணுமூர்த்தி கொண்ட செருக்கை அடக்குவதற்கு அவரது நெற்றியிலே குற்றி இரத்தப்பலியேற்றும், அக்கினிவண்ணத்தையுடையதுமாகிய வைரவப் பெருமான் திருக்கரத்தே பயித்த சூலப்படையை ஒருவாறு உவமை கூறலாமேயன்றி வேறு இல்லையென்பதாம்.


இதிலிருந்து வேற்படையும் சூலப்படையும் சமம் என்பதும், அவற்றை ஆவையாகவே வழிபடலாம் பெறும். அதுவேயன்றி வேற்படையை முருகமூர்த்தியாகவும், சூலப்படையை வைரவமூர்த்தியாகவும் வழிபடுவதற்கோ பிரதிஷ்டை செய்வதற்கோ வேதாகம சாஸ்திரப் பிரமாணங்கள் இடமளிக்கவில்லை. பக்தி மார்க்க வழிபாட்டுக்குப் பிரமாணம் வேண்டியதில்லை என்பதும் தெற்றும்.

## ஞ்சா செடி வளர்த்தாராம்

உடுப்பிட்டி, வியாநெல்லியடியில் சிதம்பரப்பிள்ளை என்பவருடையவீட்டில் கஞ்சாசெடிகள் வளர்க்கப்படுவதாகப் பருத்தித்துறைப் பொலிசாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலைத் தொடர்ந்து பொலிசாரின் திடீர் பரிசோதனையின் போது அவ்வீட்டு வளவினுள் சில கஞ்சாச் செடிகள் இருக்கக் காணப்பட்டு பிரஸ்தாப நபர் பொலிசாரால் கைது செய்யப்பட்டு பின்னர் சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

## தீபாவளித் திரை விருந்து

| | | |
|---|---|---|
| கிங்ஸ்லி (கொழும்பு) | பிளாஸா (வெள்ளவத்தை) | நவா (கொம்பனித்தெரு) |
| வெலிங்டன (யாழ்ப்பாணம்) | விஜயா (மட்டக்களப்பு) | ஸ்ரீகிருஷ்ண (திருமலை) |
| மொடேர்ண் (பண்டாரவளை) | மொடேர்ண் (பதுளை) | ராஜிதா (ஹட்டன்) |



சிவாஜி கணேசன் தேவிகா
சந்திரபாபு, புஷ்பலதா, அசோகன், பாலாஜி,
நாகையா, ஏ. வி. எம். ராஜன்
ஜாவர் சீதாராமன், பி. எஸ். வீரப்பா
நடிக்கும்
ஆண்டவன் கட்டளை
இசை: விஸ்வநாதன் இராமமூர்த்தி
டைரக்ஷன்: சங்கர்

# வரி விளம்பரம்

## கல்வி

வகுப்புகள்

பாலர் வகுப்பு முதல் எஸ். எஸ். சி. வகுப்புவரை சிங்கள வகுப்புகள் நடத்தப்படுகின்றன. ஐக்கிய கலாசாலை, நெல்லியடி, கரவெட்டி / 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 1482

## விற்பனைக்கு

காணி:

5 பரப்புக்காணியில் சகல நவீன வசதிகளும் நிறைந்த வீடு பிரவுண் வீதியில் விற்பனைக்குண்டு விபரங்களுக்கு: 64/1, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம். 1154

கோழிக்குஞ்சுகள்!

கோழிக்குஞ்சுகள் இனம் பார்த்து வாங்குவோர்க்கு ஓர் நற்செய்தி. சேவல்கள் கொடுக்கப்படும். விலைப்பட்டியல் எழுதுங்கள் அனுப்பப்படும். விலைப்பட்டியல் பதிவுசெய்து ஒருமாசத்துக்குள் குஞ்சுகள் அனுப்பப்படும். அருணா ஏஜென்சிஸ், அளவெட்டி 1466

## வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, சிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இலவசம். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற வியந்துள்ளனர். இந்த டாக்டர் கப் பூரணானந்தர் I. F, கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## WANTED

Teacher:


Wanted Mathematics, Physics, Chemistry Teacher for G. C. E. forms. United Institutes, Nelliady, Karaveddi. 1481

## சேவை

தையல் மெஷின்

தையல் மெஷின்—பெற்றோமாக்ஸ் உங்கள் திருப்திக்கு திருத்திக் கொடுக்கப்படும். உதிரிப்பாகங்களும் பெற்றுக் கொள்ளலாம்; அருணா ஏஜென்சிஸ், அளவெட்டி. 1461

ஸ்ரீ வரதான் பிடவை மாளிகைக்கு வேயி ஜும், கவுண் பூவேலைகள் பிளவுஸ் டிசைன்கள் செய்யக்கூடிய திறமை வாய்ந்த பெண்மணிகள் தேவை. வேலைத் திறனுக்கேற்ற சம்பளம் வழங்கப்படும். விபரங்களுக்கு இம்மாதம் கடைசி வரை தெரிவில் விஜயம் செய்யவும். ஸ்ரீ வரதான் பிடவை மாளிகை, 27/2, மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம். 1159



இலங்கை போக்குவரத்து சபையின் இந்து ஊழியர் சங்கத்தினரின் ஆதரவில் திருக்கேதீஸ்வர பாலாவிப் பிள்ளையார் கோவில் நிதிக்காக கொழும்பு பக்தி மன்றத்தினர் யாழ்ப்பாணம் திறந்தவெளி அரங்கில் இருதினங்கள் நடத்திக் காண்பித்த 'மீனாட்சி கல்யாணம்' என்னும் நாட்டிய நாடகத்தில் பங்கெடுத்துக் கொண்ட மாணவிகளை படமாகாண அதிபர் திரு. லேர்வலின் ஐயசேகரா பாராட்டுவதைத்தான் மேலே காண்கிறீர்கள்

புனித ஸ்நானம் செய்து புத்தாடை உடுத்திருக்கும் இந்நன்னாளில்

தீபாவளி வாழ்த்துக்கள்

தரத்தில் சிறந்த

கிரிக்கோ சூப்பர் கோப்பி

தயாரிப்பாளர்

ஜோன் கிரீன் அன் கம்பெனி

86, வால்ஸ் லேன், கொழும்பு-15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'யாழ்ப்பாண சேலைகள் வெளிநாடு செல்லும்'

## மந்திரி தகநாயகா தகவல்

திருநெல்வேலி, வியா

டாக்டர் தஹநாயகா அரியாலை மின்சக்தி நெசவு நிலையத்தைத்திறந்து வைத்துப் பேசியதாவது:-

சில மாதங்களுக்கு முன்னர் நான் யாழ்ப்பாணம் வந்து அரசாங்க செயலகத்தைத்திறந்து வைத்தபோது யாழ்ப்பாண மக்களுடன் அதிகமாகக் கலந்துகொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை. இந்த இரு நாட்களிலும் யாழ்ப்பாணத்தில் அதிகமான பொதுவைபவங்களிலும் நான் கலந்துகொள்ளவிருப்பதால் இப்பகுதி மக்களது பழக்க வழக்கங்கள், தொழில்கள், வைக்கம் ஆகியவற்றைக் காணும் வாய்ப்பை நான் பெற்றுள்ளேன். முதலில் என்னை இங்கு அழைத்தமைக்கு இத்தொகுதிப் பிரதிநிதி டாக்டர் நாகநாதனுக்கு நான் நன்றியைத் தெரிவிக்கின்றேன். எனது தற்போதைய யாழ்ப்பாணவருகை அநேக நெசவு நிலையங்களைத் திறந்துவைப்பதே.

அவர் மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது! வடமாகாணத்திலுள்ள ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் ஆறுநெசவு ஆலைகள் அரசாங்கத்தால் திறக்கப்படவுள்ளன. அவ்வேலைகளில் வெளிநாடுகளுடன் போட்டிபோடக்கூடிய தரமான துணிகளை நாம் தயாரிப்போம். அப்பொழுதுமணிப்புரி காஞ்சிபுரம் சேலைகள் என்பதுபோல் யாழ்ப்பாணத்துச் சேலைகளும்பெயர் பெறும் என்பது நிட்சயம். அவைகளை லண்டன், நியூயோர்க் ஆகிய மேல்நாட்டு நகரங்களில் விற்பனைசெய்ய அங்குவிற்பனை நிலையங்களை ஆரம்பிக்க நான் விரைவான நடவடிக்கை எடுப்பேன். 1967-ம் ஆண்டிலிருந்து கைத்தறித்தொழில் எனது அமைச்சின் கீழ் கொண்டுவரப்படவிருக்கிறது.

## சாவகச்சேரியில் தேநீர்க்கடை பிரவேசம்

### தமிழரசுக்குழு முடிவு

யாழ்ப்பாணம், வெள்ளி

சாவகச்சேரி தொகுதியில் சாதிவித்தியாசத்தை ஒழிக்கும் பொருட்டு தேநீர்க்கடை பிரவேசம் நடைபெறும். இதற்கான திகதியை குழுத்தலைவர் திரு. வி. என். நவரத்தினம் பின்பு அறிவிப்பார். இதைத் தொடர்ந்து மற்றும்தொகுதிகளில்தேநீர்க்கடை பிரவேசம் நடைபெறும்.

நேற்றுமாலை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் சாதி ஒழிப்புக் குழுக்கூட்டத்தில் மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது. இக்கூட்டத்திற்கு குழுத்தலைவர் திரு. வி. என். நவரத்தினம் தலைமைவகித்தார்.

—

வவனியாவில்

## பாலம் உடைந்தது

யாழ்ப்பாணம், வெள்ளி

வவனியாவிலுள்ள ஒரு பாலம் நேற்று முன்தினம் பெய்த பெருமழை காரணமாக உடைந்ததால் போக்குவரத்துக்கள் தடைப்பட்டன. 115-ம் கட்டையிலுள்ள றம்பக்குளம் என்னுமிடத்தில் பாலம் உடைந்தது.

## குறிகட்டுவான் பாலம்சேதம்

நெடுந்தீவு, வெள்ளி

நேற்று முன்தினம் இரவு பெய்த பெருமழையாலும் புயலாலும் ஏற்பட்ட கடற்கொந்தளிப்பால் குறிகாட்டுவான்பாலம்பலத்த சேதத்துக்குள்ளாகியது. இதனால் இப்பாதையால் போக்குவரத்து செய்யப் பிரயாணிகள் பெருத்த கஷ்டத்துக்குள்ளாகியிருப்பதாகத் தெரிகிறது.

—

## கதாப்பிரசங்கம்

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில் இன்றுமாலை கி. க. ஆறுமுகம் திருவிளையாடல் கதாப்பிரசங்கத் தொடரில் ''திருமுகம் கொடுத்தது'' என்னும் பொருள்பற்றி கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார்.

—

## யுத்த ஞாபகார்த்த தினம்

கொழும்பு, வியாழன்

இரு மாபெரும் யுத்தங்களின் ஞாபகார்த்த தினமாக நாளையதினம் அனுஷ்டிக்கப்படவிருக்கிறது. இதனை முன்னிட்டு பகல் 11 மணிக்கு 2 நிமிட நேர மௌனம் அனுஷ்டிக்கப்படும். பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் இதற்கான அறிவித்தலைச் செய்வார்கள்.

## 'புதிய இயக்கங்கள் தோன்றக்கூடாது'

யாழ்ப்பாணம், வெள்ளி

''சிறுபான்மைத்தமிழருக்கிடையே புதிய ஸ்தாபனங்கள் எதுவும் சத்தியாக்கிரக இயக்கம் முடிவு பெறும் வரைதோன்றாதிருக்கவேண்டும்'' இத்தீர்மானம்நேற்று மல்லாகம் முருகமூர்த்தி கோவிலின்முன் நடைபெற்ற சிறுபான்மை இயக்க பொதுக்கூட்டத்தில் ஏகமனதாகநிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்துக்கு கவிஞர் மு. செல்லையா தலைமை தாங்கினார்.

சைவப்புலவர் திரு எஸ். வல்லிபுரம் பேசுகையில், அண்மையில் கைதடியில் கூடிய சைவ வாலிபர்கள் மாநாட்டில் சிறுபான்மைத் தமிழர்கள் நடத்தும் சத்தியாக்கிரக இயக்கத்தை ஆதரிப்பதென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதென்றும் கொழும்பு இந்து மன்றமும் இவ்வியக்கத்துக்கு ஆதரவு தருகின்றது என்றும் இது சிறுபான்மைத் தமிழர் முன்னணியின் வெற்றிக்கறிகுறியாகும் என்றும் கூறினர்.

## மாவட்டசபை...

1-ம்பக்கத் தொடர்ச்சி

உரிய காலத்துக்கு முன்னதாகும். மாவட்ட சபைகள் மசோதாவின் நகல் தெரியுமுன்னரே, அவற்றின் அமைப்பு, நோக்கங்கள்பற்றி நீங்கள் வைத்திருக்கக்கூடிய பயங்கள் வீணே.''

மங்கள ராஜமானிக்காரை பீடாதிபதி மாவட்ட சபைகள்பற்றி அச்சந் தெரிவித்து வெளியிட்டிருந்த ஒரு கடிதத்துக்கே பிரதமர் இவ்வாறு பதில் எழுதியுள்ளார். பிரதமரின் இக்கடிதம், நாட்டைப் பிரிக்கும்வகையில் வடக்கு, கிழக்கு மாகாண மாவட்ட சபைகளுக்கு விசேஷ அதிகாரங்கள் அளிக்கும் மசோதாவொன்றை உள்ளூராட்சி மந்திரி திரு. மு. திருச்செல்வம் தயார் செய்துள்ளார் என்ற வதந்திகளைத் தெளிவுபடுத்தியுள்ளது.

தமிழ்ப் பிள்ளைகளைச் சிங்களத்தைக் கட்டாயமாகப் படிக்கவைக்கச் சிங்கள ஆசிரியர்களை வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்ப வேண்டுமென்று ராஜமானிக்காரைப் பீடாதிபதி விடுத்துள்ள கோரிக்கைக்கு ''அரசாங்கம் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குச் சிங்கள ஆசிரியர்களை அனுப்பியுள்ளது. விருப்பமில்லாத தமிழ்ப்பிள்ளைகளின் தொண்டைக்குள் சிங்களத்தைத் திணிக்க முயற்சி செய்யவில்லை. தமிழ்ப் பிள்ளைகள் சிங்களத்துடன் பரிச்சயம் கொண்டு, அதனைப் படிக்க சந்தர்ப்பமே அரசாங்கம் அளித்துள்ளது. எதிர்காலத்தில் அரசாங்க உத்தியோகத்தில் சேர விரும்பும் பிள்ளைகளுக்கு இது கட்டாயம் உதவியாயிருக்கும். சிங்களத்தை முன்பாகவே கற்றுள்ளபடியினால், அரசாங்க சேவையில் இவர்கள் தமது தற்காலிக சேவையில் உறுதிப்படுத்தப்படுவதில் அவ்வளவு கஷ்டம் அனுபவிக்க வேண்டியேற்படாது. வடக்கு, கிழக்கு மாகாணத்துக்குச் சிங்கள ஆசிரியர்களை அரசாங்கம் அனுப்பியுள்ளது, சரித்திரத்தில் இதுவரை செய்யப்படாத நடவடிக்கையாகும். ஏற்கனவே அப்பகுதிகளில் 785 ஆசிரியர்கள் படிப்பித்துவருகிறார்கள்'' என்று பிரதமர் டட்லி சேனநாயக்கா பதிலளித்துள்ளார்.

## அறிவித்தல்

'சண்டிருப்பாய் ஐயனார் கோவில் விசேஷ பொதுக் கூட்டம்' என்ற தலைப்புடன் இக்கூட்டம் இன்று மாலை (11-11-66) 3 மணிக்கு நடைபெறுமென வெளியிடப்பட்டுள்ள துண்டுப் பிரசுரம், மனேஜரும் தலைவருமாகிய எனது அங்கீகாரமெதுவுமின்றி வெளியிடப்பட்டுள்ளது என்பதையும் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்படும் நடவடிக்கைகள் முறையற்றன என்பதையும் அறிவிக்கின்றேன். த. செல்லத்துரை, ஐயனார் கோவில் மனேஜர், தலைவர். 1161

வாகனப்பயிற்சிபெற்ற, பெறுகின்ற, பெறப்போகின்ற மாணவர்கள் அனைவருக்கும் அனுதாபிகளுக்கும்

புருடன் மாஸ்டர்ஸ் லேனஸ

ஸ்தாபனத்தார் தங்கள் உள்ளங்கனிந்த

தீபாவளி வாழ்த்துக்களை

தெரிவித்துக் கொள்ளுகிறார்கள்.

மீண்டும் எங்கள் நற்சேவை உங்களுடையது.

62, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7239.

1873


## மந்திரி சபையில்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

எம். பி. திரு. தேவநாயகமும் உள்ளூராட்சி மந்திரி திரு. திருச்செல்வத்தைக் கடுமையாகக் கண்டித்து, அவரை ராஜினாமாச் செய்யும்படியும் கோரவேண்டுமென்று கூட்டத்தில் கூறினர்.

எல்லோருடைய அபிப்பிராயங்களையும் தாம் பரிசிலனை செய்வதாகவும், ஆனால் எவருடைய பாட்டுக்கும் தாம் தாளம் போடத்தயாராகவில்லையென்றும், தாமே தம்முடைய சொந்த முடிவை எடுப்பாரெனவும் பிரதமர் இறுதியில் கூறினார்.

இவ்வாரம் முற்பகுதியில் மந்திரிசபைக் கூட்டத்தைத் தாம் அழைப்பாரெனவும் பிரதமர் தெரிவித்தார்.




சன்லைட்

மேலும் பிரகாசமாகச் சலவை செய்கிறது பாருங்கள்

வேறெந்த சோப்பும் நிகர் நிற்க முடியாத பிரகாசம்

அதற்குக் காரணம், சன்லைட்டில், உங்கள் ஆடைகளை, மேலும் பிரகாசமாக—சலவைக்குச் சலவை பிரகாசமாக—தோன்றச் செய்யும் ஒரு விசேஷ பொருள் சேர்ந்திருப்பதே. சன்லைட்டின் செழுமையான நீடித்த நுரை, முழு அழுக்கையும், விரைவாகவும், இலகுவாகவும் அகற்றுகிறது; அதே வேளையில் அது மென்மையானது, இதமானது. ஒரே ஒரு கட்டி சன்லைட், பலரகமான 50-60 ஆடைகளைக் கழுவுகிறது—ஒரு ஆடைக்குச் செலவு ஒரு சதத்திலும் குறைவு.

மேலும் மேலும் தாய்மார்கள், தங்கள் வீட்டில்—சேலைகள், சேர்ட்டுகள், காற்சட்டைகள், பாவாடைகள், துவாய்கள், படுக்கை விரிப்புகள் போன்ற சகல ஆடையணிகளையும் சலவை செய்ய, சன்லைட் உபயோகிப்பதில் ஆச்சரியமில்லை. தங்கள் சலவை வேலைகளுக்கு சன்லைட்டே சிறந்ததென்பது அவர்களுக்குத் தெரியும்—மிகச் சிறந்ததே அவர்களுக்கு மிகத் தகுந்தது, தங்கள் குடும்பத்தினர். மேலும் பிரகாசமான மேலும் கவர்ச்சியான உடையணிந்து தினமும் காட்சியளிப்பதைக் காண, அவர்கள் விரும்புகிறார்கள். சன்லைட்டை அவர்கள் உபயோகிப்பதற்கும், நீங்கள் உபயோகிக்க வேண்டியதற்கும் காரணம், இதுதான்—ஏனெனில், அது மேலும் பிரகாசமாகச் சலவை செய்கிறது.

ஒரு லீவர் உற்பத்தி

SWT/3/1284

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி, 62-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு நவம்பர் மாதம் 11-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது **தீபாவளி வாழ்த்துக்கள்**<br>**கே. டி. எம். ஜுவல்லர்ஸ்**<br>கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். | # தீபாவளி மலர்<br>ஈழநாடு 11-11-66 அனுபந்தம் | ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது **தீபாவளி வாழ்த்துக்கள்**<br>**கே. என். எம். மீருன் சாஹிப்**<br>தங்கப்பவுண் நகை மாளிகை<br>கன்னாதிட்டி, : யாழ்ப்பாணம்.<br>போன்: 585 |

## தீபாவளித் திருநாள்

— 'சேந்தன்' —

இரா: நாத நாமக்கிரியை     தாளம்: ஆதி (திஸ்ரநடை)

**பல்லவி**

திருநாளாம் நல்ல திருநாளாம்—எங்கள்
தீபா வலியாந் திருநாளாம்.

**சரணம்**

காலை விடியுமுன் எழுந்திடுவோம்—பின்பு
களிப்புடன் நல்லெண்ணெய் தேய்த்திடுவோம்
சாலவே நீராடி வந்திடுவோம்—எங்கள்
சாமிப் படத்தை யடைந்திடுவோம். (திரு)

குத்து விளக்கும் கொளுத்தி வைப்போம்—அங்கு
கூடவே பட்சணஞ் செய்து வைப்போம்
புத்தாடை ஒன்றாய் அடுக்கி வைப்போம்—நல்ல
புதுமலர் மஞ்சளுஞ் சார்த்தி வைப்போம். (திரு)

வெற்றிலை பாக்குப் பழங்களுடன்—கமழ்
வேண்டிய தூபமு மிட்டுவைப்போம்
கற்பூரத் தீபமும் காட்டி நிற்போம்—நம்மைக்
காத்திடு தெய்வத்தை வணங்கி நிற்போம் (திரு)

கோடி யுடுத்து மகிழ்ந்திடுவோம்—பின்
கும்பிடக் கோயிலும் போய்வருவோம்
தேடிப் பெரியோர்கள் ஆசிபெற்றுப்—பின்
சேர்ந்துமே பட்சணம் தீர்த்துவைப்போம். (திரு)

உற்றார் உறவினர் வீடு செல்வோம்—புது
உடையினைக் காட்டிவிருந்து முண்போம்
மற்றநாள் புத்தாடை கட்டிச்செல்வோம்—பள்ளி
மகிழ்வோடு பாலர்நாம் ஓடிச்செல்வோம். (திரு)



## தீபம் ஏற்றுவோம்!

எனது மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் அவதானித்துக்கொண்டிருந்தாள் சரோ. நண்பகல் உணவிற்குச் சென்றபோது 'என்ன ராஜி, ஒரே குஷி' என்றாள்.

சரோ நேற்று அத்தான் ஊரிக்கையென ஒரு மடல் கூறியது கூடவே நீல டெக்ரூன் சாறி பிளவுஸ் துணி எல்லாம் வாசலில் வந்தன. எனக்குவந்த ஆத்திரமும் அழுகையும் சொல்லுந்தரமன்று. அவற்றை அத்தான் அகக் கண்ணால் கண்டாரோ அல்லவோ! இதோ மறுமடல் அனுப்பியுள்ளார். தீபாவளிக்கு நான் எப்படியும் வந்துவிடுகிறேன்' ஆயத்தம் செய் என வரைந்துள்ளார். இன்று நான் குறுகியகால லீவில் செல்லப்போகிறேன் என்றேன்.

அத்தானுக்கு பிரியமான தேன்குழல், கட்லெற் எல்லாம் தயாரித்தேன். காரின் 'பூம் பூம்' சத்தம் அத்தான் வருகையை அறிவித்தது.

திட்டமிட்டபடி காலை முழுகிவிட்டு கோவில் சென்றுவந்தோம். மத்தியானச் சமையலும் விரைவில் முடிந்தது. இருவரும் உணவருந்திவிட்டு அம்மா வீடு சென்று மாலை கோவளக் கடற்கரைக்குச் சென்றோம்.

இத்தீபாவளி ஏன் ஆண்டிற்கு ஒரு முறைதான் வருகிறது. அடிக்கடி வந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்றார் அத்தான். ஏனென்றேன். தீபாவளி என்ற சாட்டில்லாவிட்டால் இப்படி நாம் சந்தோஷமாக இருக்க முடியுமா ராஜி! விழா வரலாறுகளெல்லாம் தெரிந்த மேதையல்லவோ நீ. ஏன் நாம் தீபாவளியைக் கொண்டாடவேண்டும் என்றார்.

அத்தான்! என்னை அதிகமாகப் புகழாதீர்கள். இந்துக்களின் ஒவ்வொரு விழாக்களும் பேருண்மைத் தத்துவங்களை தம்முள் அடக்கியிருக்கின்றன. வீடுகளிலும் ஆலயங்களிலும் தீபங்களை வரிசையாக்கி எங்கும் ஒளி பரவச் செய்கிறோம் அல்லவா. நமது உள்ளமும் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மல இருளினால் கவ்வப்பட்டிருக்கிறது. அவ்விருளை அகற்றவேண்டுமாயின் ஆண்டவனாகிய பேரொளிப் பிழம்மை நாம் நண்ண வேண்டும். நண்ணி அவனருளால் எம் உள்ளத்தில் ஞான ஒளி பிரகாசிக்கச் செய்ய வேண்டும். மக்களே புற இருளை வரிசையான தீபங்களால் விலக்குவதுபோல உங்களது அக இருளை ஆண்டவனின் பேரொளியால் அகற்றுங்கள் என்று தீபாவளி நமக்குத் தெரிவித்துக் கொண்டிருக்கிறது அத்தான் என்றேன்.

வா ராஜி! இருட்டிவிட்டது. வீடு விரைவோம். வீடு விளங்கத் தீபங்கள் ஏற்றுவோம். உள்ளம் துலங்க இறைவனை வேண்டுவோம் என்றார்.

—பூரணி

## பெருந்திரள் சேர்ந்து பணிந்திடுவோம்!

சித்திரமாளிகை பொன்னொளிர் மாடங்கள்
  தேவத்திருமகளிர்—இன்பந்
தேக்கிடுந் தேனிசைகள்—சுவை
  தேறிடும் நல்லிளமை—நல்ல
முத்துமணிகளும் பொன்னும் நிறைந்த
  முழுக்குடம் பற்பலவும்—இன்கேதர
முற்பட்டு நிற்பவனைப் பெருந்திரள்
  மொய்த்துப் பணிந்திடுவோம்—வாரீர்

— பாரதி


எல்லோர்க்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்!



எங்களிடம்

இலங்கையில் தயாரிக்கப்பட்ட எல்லாவித மின்சார உபகரணங்களும்
மொத்தமாகவும் - சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

உள்ளூராட்சி மன்றம் - தொழிற்சாலைகள் ஆகியவற்றிற்குத் தேவையான மின்சார உபகரணங்களும் எம்மிடம் உண்டு.

வியாபாரிகளுக்கும் மின்சார ஒப்பந்த காரர்களுக்கும் விசேஷ கமிஷன் வழங்கப்படும்.

போன் 7016

**நியூரோன் எலெக்ட்ரிக்கல்ஸ்**

(றட்ஜ் (Rudge) சைக்கிள் விநியோகஸ்தர்கள்)

(உரிமையாளர்: T. அழகரத்தினம்)

228, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோர்க்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்!

நவீன வேலைப்பாடுகளும் உத்தரவாதமும் உள்ள தங்க வைர நகைகளை தெரிவு செய்ய



சிறந்தஸ்தாபனம்

புதிய ஆபரண மாளிகை

NEW JEWEL PALACE

கன்னுதிட்டி ::-:: யாழ்ப்பாணம்

போன்: 7042



ஆதரவாளர்களுக்கும் வர்த்தக அன்பர்களுக்கும் எமது மனமுவந்த தீபாவளி வாழ்த்துக்கள்!

அன்னம்ஸ் சாறி வேக்ஸ்

(யாழ். நகரில் சேலைகளுக்கு குஞ்சம் (டசல்ஸ்) இணைப்பதில் முதன்மை வாய்ந்தவர்கள்)

27/1 மின்சார நிலைய வீதி — யாழ்ப்பாணம்.

(விக்னேஸ்வரா மேக் மாடி)

இலவசமாக இப்பொழுது கிடைக்கிறது

ஒவ்வொரு லூக்காஸ் சொந்தக்காரருக்குப்

கிரிப்டன் துரித, உத்தரவாத

பாட்டரி சேவை

முழு மாவட்டத்திலுமே இத்தகைய

...க்கு முன்மாதிரி இதுவே

...பா & கோ.,

...பாட்டரி விநியோகஸ்தர்கள்)

...ருட், யாழ்ப்பணம்.

...கணபதி ஸ்ரோர்ஸ்

யானை மார்க்

...ல்லெண்ணெய்

சுத்தமான இலங்கை எள்ளில்

...தார முறைப்படி தயாரிக்கப்பட்டது


...ாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

...காரர்: கா. சு. கணபதிப்பிள்ளை அன் சன்ஸ்

...துரியார் வீதி, -::- யாழ்ப்பாணம்.

...ல்லோர்க்கும் எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

நீடித்து உழைப்பது



சொனென்ஷீன்

பற்றறி ஒன்றே

ஜெர்மன் தயாரிப்பு

வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்

துரை அன் கோ

23/2, ஸ்ரான்லி ரோட், -::- யாழ்ப்பாணம்.

## தீபாவளித் தித்திப்பு

# காந்தி அடிகள் வார்த்த கஞ்சி

— முருகு நீலாம்பரி —

"டேய் தெருவாசலில் நின்று என்ன செய்கிருய்?"

"சும்மா நிற்கிறேன் அம்மா."

சும்மா நின்ற சுப்புணிப் பயல் அம்மாவின் குரல் கேட்டு தெருவாசலை விட்டு இடம்பெயர்ந்து உள்ளே இறங்கிஞன். இறங்கியவன் அம்மாவிடம் ஓடோடிச் சென்ருன்.

"அம்மா, அம்மா! பக்கத்துவிட்டுக் கமலாவும் வரதனும் தங்கள் அப்பா அம்மாவுடன் கூட எங்கேயோ போய்விட்டுப் போகிருர்கள். ஒவ்வொருத்தர் கையிலும் ஒரு பார்சல். அது என்னம்மா?"

"நீ உந்த விடுப்புகள் பார்க்கத்தானே தெருவுக்குப் போகிறனி? அவையள் தீபாவளிக்கடைக்குப் போய் வருகினமாக்கும்."

"நாங்கள் போகிறதில்லையோ அம்மா?"

"நாங்கள் இந்த வரியம் போகிறதில்லை—"

"பின்னே, அடுத்த வரியமோ?"

"அடுத்த வரியமும் போகிறதில்லை. புடவைக் கடைக்கே போகிறதில்லை,'.

"அப்போ உடுத்ததுகள் எல்லாம் கிழிஞ்சு போனுல் என்ன செய்கிறது?"

"கிழிஞ்சதுகளைத் தைத்து உடுக்கிறதுதான்".

"என்னம்மா?"

"பின்னே, என்ன நெடுக அலட்டுகிருய்? கொக்காள் அல்லோ உனக்கு எனக்கு சின்னண்ணருக்கு எல்லாருக்கும் இந்தமுறை தீபாவளிக்கு வேட்டியும் சேலையும் கொண்டுவந்து தரப்போகிருள்."

"ஓ, அதுவா? அக்காள் நெசவுவேலைக்குப் போவதைச் சொல்லுறியா? நான் மறந்தேபோனேன் அம்மா. நெசவு நிலையத்தில் வேலை பார்க்கிற எல்லாருக்கும் இந்தவரியம் தீபாவளிக் கொண்டாட்டம் இப்படித்தான் நடக்குமோ அம்மா."

"கொக்காவோடு வேலை செய்கிற ஐம்பது பொடிச்சிகளும் இந்தவரியம் தீபாவளியை இப்படித்தான் கொண்டாடப்போகினமாம். எல்லாரும் தங்கள் வீடுகளுக்குத் தேவையான தீபாவளித் துணிமணிகளைத் தங்கள் கையினுல் நெசவு செய்தே எடுத்துக் கொள்கிருர்களாம். இனிமேல் நெடுகிலும் இப்படித்தான்நடக்கப் போகிறது. தீபாவளி, வருசப்பிறப்பு, தைப்பொங்கல், கல்யாணம் எதற்குமே கடைக்குப்போய் துணிவாங்கிறதில்லை."

"அக்காள் புதுசு புதுசாய் வேட்டியும் சட்டையும் கொண்டுவந்து கொடுக்கிருஞல் பிறகு கடைக்கு ஏன் போவான்? கடைக்குக் கொடுக்கிற்காசை அக்காவிடம் கொடுத்துவிடுவோம். நல்லதுதானே அம்மா."

"எல்லாவீட்டுக்காரரும் அந்தப் பொடிச்சிகள் அத்தனைபேரின் பெற்றோரும் அண்ணன் தம்பிகளும் அக்காள் தங்கை என்றிருப்போரும் கடைக்குப்போய் அணிவாங்கிக் கட்டுவதில்லை என்று தீர்மானித்திருப்பதால் கொக்காளோடு சேர்ந்த ஐம்பதுபேருக்கும் ஒரு வேலை கிடைக்கிறது. ஊர்க்காசிலே பாதிக்குப்பாதி ஊருக்குள்ளேயே நிற்கிறது. எங்கள் பிள்ளைகள் நெய்த துணிஎன்று அதை அணிந்து கொள்வதிலும் மனதுக்கு ஒரு மகிழ்ச்சி,"

"உ.,. ஊய்... கமலா அவையின்ரை தீபாவளிகண்ணுக்குத்தான் மகட்டு. அக்கான் எப்போ வருவா அம்மா"

"அவள் விளக்கேற்றுவதற்குள் வந்துவிடுவாள். நாளைக்கு ஐப்பசி கடைசி வெள்ளிக்கிழமை. நான் பொழுது விடியுமுன்னமாய் எழுந்து கீரிமலைக்குப் போய் அப்படியே கந்தசுவாமியாரிடமும் போய்விட்டுத்தான் வருவன். நீ கொக்காவோடு சண்டை பிடிக்காமல் சொன்னபடி கேட்டுக் கொண்டு இருக்கவேணும், என்ன?"

"கீரிமலைக்கு உன்னோடே நானும் வரப்போகிறன்."

"பாத்தியோ, அதற்குள்ளே உன் அழுகல் குணம் வந்திட்டுதே. பொழுது விடிய வீட்டிலே தீவாவளி. நல்லபிள்ளையாயிருந்து முழுகிக்குளித்து புத்தாடை உடுத்து புதிய பட்சணங்கள் சாப்பிடவேணுமென்று சொன்னுல்—!'

"நீமட்டும் கீரிமலைக்குப் போகிறியே"

"நான் கீரிமலையில் தீர்த்தமாடிவிட்டு அங்கேயேஇவள் பிள்ளையின் புதுச் சேலையையும் உடுத்திக்கொண்டு அப்படியே கோவிலுக்குப் போய்விட்டு வருவன். அடுத்தாற்போல கந்தசஷ்டியும் தொடங்குது. அப்பவும்ஆறு நாளும் விடியமுன்னமாய் தீர்த்தமாடிவிட்டுக் கோயிலுக்குப் போகவேணும். கடைசி அன்றைக்குத்தான் உன்னைக் கூட்டிக்கொண்டு போறது—சூரசம்மாரம் பார்க்க. எல்லாம் வேறே ஆருக்காக, தகப்பனைத்தின்னிப் பிள்ளையளாயிட்டியளே என்று உங்களுக்காகத்தானே நான் கோயிலுக்குப் போகிறதும் சாமி கும்பிடுறதும். நாளைக்கு நாவெருக்கால் செல்லாச்சிவீட்டுக்குப் போய்விட்டுவாறன். அவளும் விடியக்கோயிலுக்கு வாறன் எண்டவள். நீ, கொக்கா வந்தால் அவளோடு சிண்டு பிடிக்காமல் அவள் கொண்டுவாறதைஅந்தக் காந்திபடம் வைத்திருக்கும் மேசையிலே பத்திரமாக வைக்கச் சொல்லு. புண்ணியவான்! அந்த மகாத்மா வார்த்த கஞ்சிதான் எங்களூர்ப்பொம்பிளைப் பிள்ளையள் படித்துப் போட்டு வீட்டுக்குள்ளே கிடந்து மனம் புழுங்காமல் ஏதோ மானம்மரியாதையாக ஒருவேலை பார்க்கக் கிடைச்சிருக்கு".

'ஏனணை, காந்தி என்னணை செய்தவர். அவர்தான் செத்துப்போனுரே"

"அந்த மகாத்மா உயிர் வாழ்ந்ததும் உயிர்விட்டதுமே இதற்காகத்தானே. எங்கும் இயந்திரங்களும் தொழிற்சாலைகளும் பெருகி நாட்டிலே வேலையற்ருேர் எண்ணிக்கையை கட்டுமட்டிலாமல் வளர்த்து பஞ்சம் பசிபிணி என்டு நாடு கொள்ளைபோய்க்கொண்டிருந்ததைப் பார்த்துவிட்டுத்தான் அந்த மகாத்மா மனம் கொதித்து எழுந்து எங்கள்தேசமக்களுக்கு ஏற்ற தொரு கைத்தொழில்வேண்

## "நலமெங்கும் பரக்க!"

— வ. மகாலிங்கம் —

ஓரரக்க ஞெழிந்ததற்கு உளம கிழ்ந்தே
உணர்வொடுதீ வாளிவிழ வெடுக்கும்போது
வேரரக்க ராம்மிடிமை பெருநோய் பஞ்சம்
பீடைசெறி கைலஞ்சம் களவு கொலை
வேரறுக்கும் வேலையிலாக் கொடுமை விஞ்சு
விலைவாசி விண்ணகமும் வெருண்டே பஞ்சம்
பாரறுக்கும் போரிவற்றைப் பாரி லோம்பிப்
பரவசத்தாற் களிப்படைதல் பாப மன்றோ?

புதரடர்ந்து பாழடைந்து புழுதி தோய்ந்து
புன்மைசெறி வாழ்வதனிற் புழுவாய் நைந்து
மதமடைந்த கொடியோர்க்கு மண்டி யிட்டே
மனிதாபி மானமிழந் துழலு மாக்கள்
நிதமுமிந்தப் புவிதனிலே நிறையக் கண்டும்
நிமிர்ந்தவர்க்காய் விரலசையா நெஞ்சமீண்டு
பொதுவிழாவாம் தீவாளிப் பொலிவு கண்டே
பூரிக்கு மூமைமை யெங்கே? புகல்க நாடே!

கொடுங்கோலைத் தீயாக்கிக் கொள்கை பூத்த
கொற்றமொடு நாளாடுங் குணம்ப டைத்தே
அடுதீமை தனையழித்து அறமே பூண்டு
அடிமைவிலங் கறுத்துவிடு தலைச்சங் கூதி
வடுவெனுதீச் சாதிமத வரம்பை வெட்டி
வளமாருஞ் சமத்துவமாம் வெள்ளம் பாய்ச்சிப்
பறாத கங்களிலா நாளே பாரிற்
பாங்கான தீவாளிப் பண்பார் நாளாம்.

தீவ ளி யாண்டிலொரு திருவி ழாவாய்த்
திகழாது, தினந்தினமுந் தித்தித் தோங்கி
நாவார வாழ்த்துமொரு நல்வி ழாவாய்
நலந்திகழ்ந்த நாடு பொலி நாளேயாகத்
தாவாரம் பூணுமொரு தன்வி ழாவாய்த்
தரணிக்கோ ரறநெறியைத் தந்த நாளாய்
பாவாகப் பண்ணமைந்த பனுவ லாகப்
பரவிடுக, நலமெங்கும் பரக்க மாதோ!

○ தா — துன்பம். வாரம் — பங்கு.
[பிறர் துன்பத்திற் பங்கு கொள்ளுதல்.]

ஜெனரல் இன்டஸ்ட்ரீஸ் லிமிட்டெட்.,

இல: 45, அப்பலவாணர் வீதி, — — யாழ்ப்பாணம்.

இல: 20, ஸ்டான்லி வீதி, — — யாழ்ப்பாணம்.

ரீட்ரெடிங், காஸ்டிங், மஷீனிங், வெல்டிங்,

பிளாஸ்டிக் கோட்டிங்

போன்: 7024 யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளங்களில் ஞானதீபம் ஒளிவீடட்டும்

## ஸ்ரீ சச்சிதானந்தஜி விடுத்த தீபாவளி வாழ்த்து !

(புங்குடுதீவு, திவ்யஜீவன சங்க போஷகர்)



...திவ்விக ஒளி ...ம் திருநாள் ...ளி. பாமரருக் ...ண்டிதர்க்கும், ...வக்கும், பாம ...கும், ஏழைக் ...செல்வனுக்கும் ...ாருக்கும் மே ...ம் தடும் நன் ...எல்லோர் உள் ...லும் ஞான ... ஒளிதரவேண்

...வ்வாறு ஸ்ரீ ...மி) சச்சிதா ... சுவாமிகள் ...துள்ள தீபா ... திருநாள் ஆசிச் ...தியில் குறிப்பிட் ...ார்.

...ாமிஜி மேலும் ...செய்தியில் குறிப் ...ருப்பதாவது:- ...ாலையில் புனித ...ட. புத்தாடை புனைந்து ...ளை வணங்கி, அறுசுவை ...ு, உற்றார் உறவின ... கூடிக்கு... குதூ ...கின்றோம். ... நாள் ...வதும் இந்த ஆனந்தம் ...டுக்கு ஒருநாள் இருந் ... போதுமா? இல்லை ...ும் தீபாவளியாக இன் ...ாணவேண்டும் அது எப் ...முடியும்? உள்ளத்தில் ...தீபத்தை ஏற்றிவைத் ... இன்பத்திருநாளை என் ...கொண்டாடுவோம்.

...களின் மன உலகம் மிக ...து அங்கு ஆட்சி ... மாறி மாறி அமை ...ஆணவம் என்னும் அசு ... ஆட்சி நடைபெறும் ... 'நான்', 'எனது' ...வும் மற்று கூடுதலாகி ... அழுக்கு அதிகரிக்கி ... அறியாமை தடித்து ... நிறைகிறது. அதனால் ... வாழ்வில் பணம், பட் ...பதவி, புகழ் என்பன ...நால் ...டைந்தா ...திருப்தி கிடைப்பதில்லை. ...ப்பது போதாதென்று ...ம் வறுமையில் வாடுகி ... இன்னும் வேண்டும் ...ண்டுமென்று தேடித் ... அலைகிறது. அதனால் ...ம் பெறலாம் என்று ...ணிக் கடைசியில் துன் ... அடைகிறது. ஆணவ ...ாசுரன் ஆட்சியில் ...சப்பெருக்கில் உலகப் ...ருளில் இன்பம்தேடி ...்வோர் பெறுவது நரக ...்வே. இந்த நிலை மாற ...ண்டுமானா... திரு ...வைச் சரணடையவேண் ... திருவருளினால்தான்

அசுரத்தன்மையுள்ள ஆண வம் அழியும். அப்போது அறியாமை இருள் அகன்று ஆத்மீக ஒளி விளங்கும், பேரின்பம் பெருகும்.

தீபாவளி என்றாலே தீபங்களின் வரிசை என்பது பொருள். தீபாவளி திருநாளில் தெய்வீகச் சிந்தனைகளாகிய தீபங்கள் மக்கள் உள்ளங்களில் ஒளிரவேண்டும். அன்பு செய், சேவை செய், கொடுத்துப்பழகு, தூய்மையாய்இரு, தியானம் பயில், அனுபூதியடை என்பன தெய்வீக வாழ்வுக்கு உகந்த சிறந்த ஞானதீபங்களாகும். அன்பர்கள் அனைவரது உள்ளங்களில் தெய்வத்தீபாவளிநாளிலே "ஞானதீபம்" ஒளி என்றும் நிலைபெற்று பேரின்பத்தைத் தருமாக!

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

### ஞானதீபம்

விவேகமே வடிவெடுக்கிறது ஞானதீபம். பக்தியின்றும் பெருக்கெடுக்கும் அமைதியே அதற்கு எண்ணெய். ஈசுவர தியானம் அது எரிவதற்கு நல்லகாற்றாகிறது. இடையறாப் பிரம்மசரியத்தினின்று வரும் பேருணர்வு அத்தீபத்துக்குதிரியாகின்றது. பற்றற்ற உள்ளம் அந்த விளக்கை வைப்பதற்கேற்ற இடமாகிறது. அங்கு ஆசையென்னும் புயல் காற்று அடியாதிருக்கவேண்டும். ஈசுவர சொரூபம் அத்தீபத்தில் எரியும் ஒளிப்பிழம்பாகிறது.

— திருமந்திரம்

...கைத்தறி நெசவும் ...ட்டையில் நூல் நூற்ற ...தான் அத்தொழில். ...ர்களுக்கு உகந்த ஒரே ...சைக்கைத்தொழில் அது ...். அதனால் நமது ...த்திலுள்ள கோடானு ...டி ஏழைமக்கள் உயிர் ...ழப்பார்கள். தேசமெங் ... கிராம ராஜ்யங்கள் ...ன்றும். அகில உலக ...ங்களில் இந்தியா தனக் ...ன்று ஒரு முத்திரை ஒரு ...டி போட்டுக்கொள்ள ...ண்டுமென்றால் ஒரேஒரு ...ந்தவழி இது என்று ...ளும் பொழுதும் வாழ் ...் முழுக்க சொல்லிலும் ...யலிலும் அதுவே மூச் ...ய் தலைப்போட்டு உழைத் ...ர். எங்களுக்குக்கூட ...சைக்காரராகவந்து கை ...ஞர். அவர் அப்பொ ... எங்களிடம் நீட்டியகை ...று அபயகரமாகியிருக்கி ...ங்கள் பிள்ளைகளுக்கு- ...றைக் கோடி பேருக்கு ...த்தறிநெசவு கஞ்சி வார்க் ...ாம். அக்கறைச் சிமையி ... இயந்திரபூத...ரகாசுரனை ...படித்து ...ரட்டி விர ...ங்க்குமாத்தானே ...க்கவேணும்''

னை பள்ளிக்கூடத்திலே வாத்தியாரும் நெடுக என்னென்னவோ அலட்டுறவர். எனக்கு ஒண்டும் விளங்குகிறதில்லை. என்னவோ,

நாட்டுப் பருத்தியை
வித்து நீக்கி நல்ல
நாகரிகமான
பஞ்சுண்டாக்கி வீட்டுக்
கொருவராய் நூல்நூற்று—

என்று ஒரு பாட்டுக்கூடப் பாடுகிறவர், ஏனணை அம்மா கடவுள் பருத்திச் செடி புடவையாய்க் காய்க்க வைக்கேல்லை—''

''அப்பதான் நீ சுகமா அதிலே ஒன்றைப் பிடுங்கி கோமணம் கட்டிக்கொண்டு பொடியங்களோடை வீணையம் உருட்ட ஓடுவாய்''

''எணை எணை, தீபாவளிக்கு இரவைக்குப் பணியாரம் சுடுகிறதில்லையோ. செல்லாச்சி அக்கா வீட்டிலே நெடுக இருந்திடாதே''

''ஓம்மேனை நான் கதைச்சுக்கொண்டு நெடுக இருந்திட்டன். எ...ன் நேரம் எங்கேயும் தெருவுக்குத் திண்ணைக்கு ஓடிப் போகாமல் வீட்டிலே இருந்து கொள் கொக்கா இப்ப...

# பேரொளிப் பெருமை பேசவும்படுமே!

—வ. மு. இரத்தினேஸ்வரன்—

உலகெலாம் மல்கிய அலகிலாவிருளை
நலமிக வேண்டி விலக்கிட முன்னோர்
கண்ட வண்டிகை கணக்கிலவாயினும்
மண்டிய விருளை மாய்த்து மக்கள்
நன்மை சார நரகனை மாய்த்தும்
தீபா வளியெனச் செப்பிய நற்றினம்
தாவா முறையில் தண்ணளி பரப்புமிலை!
பொற்றொடி சத்திய பாமா சேர
முற்றுணர் கிருஷ்ணன் முன்னி அழித்தார்
இருளும் குன்ற அருளும் தழைத்தது

அதாஅன்று

வாயிலாப் பிராணிகள் வாயில் அடியாது
நோயகல் பொருள்களை நோன்பாய்க் கொண்டு
ஒளியே பரம்பொருள் ஒளியே இன்பம்
அளிதரு மனாரும் மனையுஞ் சுற்றமும்
புதிய ஆடை புனைந்து புண்ணியக்
கதிதரும் பெருநா ளென்றே வாழுக!
பேரொளிப் பெருமை பேசவும் படுமே!
பாரிருந்துயரும் பறந்திடும் நலமே!
மங்கலம் பொலிக! இங்கிதம் வளர்கவே.

# இயந்திர பூதமே இன்றைய நரகாசுரன்

—காந்தீயடிகள்—

முன்னேறிவரும் மேற்கத்திய நாடுகள் உபயோகித்துக் கொண்டுவருவதைப் போன்று நாமும் நீர், காற்று, எண்ணெய், மின்சாரம் ஆகியவைகளைப் பூரணமாக உபயோகித்துக்கொள்ள வேண்டும் என்று என்னைக் குறை கூறுகிறவர்கள் சொல்லுகிறார்கள். இயற்கையில் மறைந்துகிடக்கும் இந்தச் சக்திகளின்மீது ஆதிக்கம் கொண்டிருப்பதாலேயே ஒவ்வோர் அமெரிக்கரும் 33 அடிமைகளைக்கொண்டிருக்கும் சக்தியைப் பெற்றிருக்கிறார்கள் என்கிறார்கள்.

### 33 மடங்கு அடிமை

இந்தமுறையையே நாமும் அனுசரித்தால் ஒவ்வொருவருக்கும் 33 அடிமைகளின் சக்தியைக் கொடுப்பதற்குப் பதிலாக இந்நாட்டிலுள்ள ஒவ்வொருவரையும் முப்பத்துமூன்று மடங்கு அடிமைப்படுத்திவிடும் என்று நான் துணிந்து கூறுவேன்.

### இயந்திரம் தீயது

செய்யமுற்படும் வேலைக்கு வேண்டிய ஆள்பலம் குறைவாக இருக்கும்போதே இயந்திரம் நல்லது. ஆனால் நம் நாட்டில் இருப்பதைப்போல செய்யவேண்டியவேலைக்குத் தேவையானதற்குமேல் ஆள்பலம் அதிகமாக இருக்கும்போது இயந்திரம் தீமையானது. சில கெசப் பரப்பையேகொண்ட ஒரு நிலத்தைப் பண்படுத்துவதற்கு நான் கலப்பையை உபயோகிக்கமாட்டேன் நமக்கு இருக்கும் பிரச்னை, கிராமங்களிலிருக்கும் லட்சக்கணக்கான மக்களுக்கு ஓய்வு இருக்கும்படி செய்வது எப்படி என்பதல்ல. ஆனால் வருடத்தில் ஆறுமாதகால வேலை நாட்களுக்குச் சமமானதாக இருக்கும் அவர்கள் சோம்பல் நேரத்தை எப்படி உபயோகித்துக்கொள்வது என்பதுதான் பிரச்னை. பொதுவாக ஒவ்வொரு ஆலையும் கிராமவாசிகளுக்கு ஆபத்து என்பது விசித்திரமாகத் தோன்றலாம். இது சம்பந்தமாக நான் கணக்கெடுத்துவிடவில்லை. என்றாலும் ஆலையில் வேலைசெய்யும் ஒவ்வொரு நபரும், கிராமங்களில் குறைந்தது பத்துப் பேர்கள் செய்யும் அதே வேலையைச்செய்துவிடுகிறார்கள் என்றுநான்நிச்சயமாகக் கூறுவேன். அதாவது இந்த ஆலைத் தொழிலாளிதம்மோடொத்த கிராமவாசிகள் பத்துப்பேருக்கு நஷ்டத்தை உண்டாக்கிவிட்டுத் தம் கிராமத்தில் சம்பாதித்ததைவிட அதிகமாகச் சம்பாதிக்கிறார். இவ்வாறு நூற்றும், நெய்யும் ஆலைகள் கிராமவாசிகளின்ஜீவனோபாயத்திற்கு இருந்த முக்கிய சாதனத்தைப் பறித்துவிட்டன. அப்படியே அந்த ஆலைகள் செய்துவிடுவதாக இருந்தாலும் அவை மலிவான,

(IV-ம் பக்கம் பார்க்க)


ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது

தீபாவளி வாழ்த்துக்கள்

சிறந்த முறையில் உத்தரவாதத்துடன் உங்கள் டயர்களைப் புதுப்பிப்பதற்கு சிறந்த இடம்

நோர்தேண் இன்டஸ்ட்ரீஸ்

8/1 ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்.

போன்: — 7158

1967-ம் ஆண்டுக்கு மிகச்சிறந்த தயாரிப்புகள்!

ஆனந்தா திருக்குறட் கலண்டர்கள்

ஆனந்தா டயறிகள்

தயாரிப்போர்: ஆனந்தா அச்சகம்

226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 348

எல்லோர்க்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள் !

அன்போடு அழைக்கிறோம்.

உங்கள் வீட்டுத் தேவைக்குரிய அழகிய கண்ணாடி வகைகளுக்கு யாழ்ப்பாண மக்களைக் கவர்ந்த

ஜெஸீமா பிக்சர் பலெஸ்

கண்ணாடி வியாபாரிகள். போன்: 7127

222, 232, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்




ரம்பேகோல்

குத்திருமலுக்கும் மற்றும் எல்லா இருமல்களுக்கும்

உங்கள் மருந்து வியாபாரிகளிடம் அல்லது

ஒறியண்ரல் ட்ரக் ஸ்ரோஸ் லிமிட்டெட்

கொழும்பு - 3

என்ற விலாசத்தில் கிடைக்கும்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாவப்படுகுழியில் வீழ்த்தும் பஞ்சமா பாதகங்கள்

— செ. சின்னத்துரை —

பஞ்சமாபாதகம் (பஞ்ச + மா + பாதகம்) ஐந்து பெரிய பாவங்கள் எனப்பொருள்படும். கொலை, பொய், களவு, கள், காமம் முதலியனவே பஞ்சமாபாதகங்களாகும். ஆறுமுகநாவலர்பெருமான் இவற்றைச் சிறுவர் கற்கவேண்டும் என்றே சைவவினாவிடையில் ஆணித்தரமாக எழுதியுள்ளார். இவற்றைப்பற்றி தற்காலத்தில் பேசுவோர் மிகச் சிலரிலும் சிலரே. சைவ மகாநாடுகளிலும் வெறும் சைவக் கூட்டங்களிலும் பொது சனங்களுக்குச் சுவறக்கூடியதாய் பஞ்சமாபாதகம் முதலிய விஷயங்களைப் பேச வேண்டும். பாவம் செய்தவர்கள் யமதூதுவர்களால் துன்புறுத்தப்படுவார்கள் என்று நாவலர் பெருமான் வேதாகமத்தை ஆதாரமாகக்கொண்டு எழுதியுள்ளார்.

தற்காலத்தில் உலகில் பயங்கரமான சூழ்நிலை நிலவுகின்றதென்பதை ஒருவரும் மறுக்க முடியாது. எங்கும் கொலையும், பொய்யும், களவும் முதலியன தாண்டவமாடுகின்றன. கொலை செய்யச்சிலர் அஞ்சார். சிலர் தற்கொலை செய்யக் கூசார். களவெடுக்கச் சற்றேனும் கூசார்சிலர். சிலர் எடுத்தது எல்லாவற்றுக்கும் பொய் சொல்லக் கூசார். இக்குற்றங்கள் படியாதவர் இடத்து மாத்திரம் உள்ளது அல்ல. படித்த உத்தியோகம் பார்ப்பவர்கள் சிலரிடத்தும் இக்குற்றங்கள் உள. ஆகையால் பஞ்சமாபாதகங்களின் தீமைக்கு முக்கியத்துவம் கொடுத்துப்பத்திரிகைகள் மூலமாகவும், மேடைப்பேச்சுமூலமாகவும் நாடகமூலமாகவும் மக்களுக்கு அறிவுறுத்தவேண்டும். இந்நோக்கத்தைக் கொண்டே இக்கட்டுரையை எழுதத்துணிந்தேன்.

பஞ்சமாபாதகங்களை தவிர்த்தலைப் பஞ்சசீலம் என்று புத்தசமயம் செப்புகிறது.

பொதுவாக உலகில் நிலவும் பற்பல சமயங்களும் பஞ்சமாபாதகங்களைப் பற்றிப் பேசுகின்றன. அவ்வவ் சமயத்திலிருப்போர் அவ்வவ் சமயத்தின்படி வாழ்க்கையை நடாத்தினால் உலகில் பூசல்கள் தோன்றா. எல்லாம் மேடைப்பேச்சாகவே முடிகின்றது. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று வாய்வேதாந்தம் பேசுகிறார்கள், அதிகம் படித்தவர்களும்சிறிது படித்தவர்களும். அன்பை அடிப்படையாகக்கொண்டே மேலே குறித்த வாக்கியத்தின்படி நாம் வாழவேண்டும். நாம் ஆண்டவனின்பிள்ளைகள் என்றும் கடவுள் எல்லாப்பொருட்களிலும் எல்லாச்சீவராசிகளிடத்தும் மறைந்து நின்று இயக்குகிறாரென்றும் உணரவேண்டும். போட்டியும்பொறாமையும் துவேஷ மனப்பான்மையும் எங்கும் காண்கிறோம். நல்ல காரியங்கள் சிலர் தொடங்க அவற்றுக்கு முட்டுக்கட்டையாகச் சிலர் வருகிறார்கள். இந்த மனப்பான்மையோடிருந்து கொண்டு "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று வாய்மாத்திரம் பேசினால் என்ன பயன்? கடவுளிடத்து அன்பை அடிப்படையாகக் கொண்டுதான் உயிர்களிடத்து அன்பும் உண்டாகும். "ஈசனுக்கன்பில்லார் அடியவர்க்கன்பில்லார். எவ்வுயிர்க்கும் அன்பில்லார் தமக்கும் அன்பில்லார்" என்று சிவஞானசித்தியார் செப்புகிறது. கடவுளிடத்தும் அன்புள்ளவன் தான் உயிர்களிடத்தும் அன்புள்ளவன். இறைவனிடத்திலும் உயிர்களிடத்திலும் அன்புள்ளவர்கள் பஞ்சமாபாதகம் செய்யமாட்டார்கள்.

கொலையே பஞ்சமாபாதகங்களில் தலையாயது. கொலை செய்யாதவனும் அதனில் உறுதியுடையோனும் தான் மற்றப்பாவங்கள் செய்யமாட்டான். மற்றவர்களுக்குத் தீங்குசெய்தலும் கொலையில் அடங்கும். மனத்தினுல் தீங்குசெய்யவேண்டுமென்று நினைத்தலும் பெரும்பாவம். தீய எண்ணத்தினுல்தான் தீய செயல் விளையும். பல தீய எண்ணங்கள் நாள்தோறும் எம் மனதில் எழும். அவற்றைக் கொடிய பாம்புக்குச் சரி என்று அகற்ற வேண்டும். தீய எண்ணங்களை நாசம் செய்வதற்கு வழி இறைவனிடத்தில் சரணாகதி அடைதல். அவனுடைய பாதங்களில் எம்மை ஒப்புவித்தால் தீய எண்ணங்கள் காலகதியில் மாண்டுவிடும். தீய எண்ணங்கள் மனதில் எழுந்தால், உடனே "சிவ, சிவ" என்று கூற வேண்டும்.

சமுதாயத்தில் எத்தனை கொலைகள்தான் சம்பவிக்கின்றன. ஆணவ வியாதி செய்யும் கொடுமையே அனந்தம். அற்ப விஷயங்களை ஒட்டியும், காதலை ஒட்டியும், போட்டியை ஒட்டியும், துவேஷம், குரோதம் முதலியவற்றை ஒட்டியும் கொலைகள் நடைபெறுகின்றன. கொலை என்ற சொல்லுமிடத்து உடலிலிருந்து உயிரைப் பிரித்தலாகும். ஐந்தறிவுடையன முதல் ஓரறிவுடையன ஈறாக எல்லா உயிர்களையும் கொல்லுதலைச் செய்யாமையே கொல்லாமையாகும். மரங்கள், செடிகள் முதலியவற்றையும் நல்ல நோக்கத்தைக் கொண்டே வெட்டவேண்டும். விளையாட்டிற்காகத் தானேசகலத்திற்கும் அதிகாரி என்ற அகம்பாவம் கொண்டு மரங்களை வெட்டக் கூடாது. அப்படி வெட்டுதல் பாவச் செயலாகும்.

(VI-ம் பக்கம் பார்க்க)

## இயந்திர பூதமே...

(III-ம் பக்கத் தொடர்ச்சி)

மேலான துணிகளை உற்பத்தி செய்கின்றனவே என்பது சரியான பதிலாகிவிடாது. ஏனெனில் ஆயிரக்கணக்கான தொழிலாளருக்கு ஆலை வேலையில்லாதபடி செய்துவிட்டதென்றால், கிராமங்களில் உற்பத்தியாகும் அதிகவிலையுள்ள கதரைவிட அதிக மலிவானதான ஆலைத்துணி அதிக விலையுள்ளதாகவே ஆகிறது. நிலக்கரிச் சுரங்கத்தொழிலாளி, நிலக்கரியை அங்கேயே அப்பொழுதே உபயோகித்துக்கொள்ளும்போது அந்த நிலக்கரி அதிக விலையுள்ளதாகாது. அதேபோலத்தமது சொந்த கதரைத்தாமே தயாரித்துக்கொள்ளும் கிராமவாசிகளுக்குக் கதரும் அதிக விலையுள்ளதன்று. ஆனால் ஆலைகளில் தயாராகும் துணி, கிராமவாசிகளுக்கு வேலையில்லாமல் செய்துவிடுகிறதென்றால், நெல் மில்களும், மாவு மில்களும் ஆயிரக்கணக்கான ஏழைப்பெண்களுக்கு வேலையில்லாதுபோகும்படி செய்துவிடுவதோடு ஜனத்தொகை முழுவதிலும் தேகாரோக்கியத்தையும் கெடுத்துவிடுகின்றன. வெள்ளை மாவையும், தீட்டிய அரிசியையும் சாப்பிடுவதில் உள்ள ஆபத்தை வைத்தியர்களும் மற்றவர்களும் மக்களுக்கு எடுத்துக் கூற வேண்டும்.


"அரஸ்கோ"
உற்பத்திப் பொருட்கள்
மிகவும் உயர்ந்த ரகத்தைச் சேர்ந்தவை

| மிட்டாய்வகைகள் | உடுப்புகள் |
|---|---|
| கிறீம் ரொவ்வி | பெண்களின் பிளவுஸ் |
| சொக்கலட் ரொவ்வி | பையன்களின் சூட்ஸ் |
| ரீபுறுட் & ரெப்ஸ் | சன் சூட்ஸ் (வெயில்காலத்திற்கேற்றவை) |
| கிளியர் மின்றஸ் | பேபி சூட்ஸ் |
| சொக்கலட் கிறஞ்ச் | பெண்குழந்தைகளின் கவுண் |
| பெப்பமின்ற் தற்போல்ஸ் | ஸ்கூல் யூனிபோம் |
| கோப்பி கிறஞ்ச் | நைலன் லேஸ் முதலியவை. |

அரஸ்கோ
"மயில்" மார்க் கற்பூரம்
மிகவும் சிறந்தது
உற்பத்தியாளர்:
அரஸ்கோ இன்டஸ்றீஸ்
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7051
தலைமைக்காரியாலயம்:
106, றெக்ளமேஷன் வீதி, கொழும்பு—11



அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது உளங்கனிந்த
தீபாவளி வாழ்த்துக்கள்!
பெண்கள் விரும்பும் முடிமயிர் வகைகளும்
அன்பளிப்புப் பொருட்களும் எம்மிடம்
மலிவாகப் பெற்றுக் கொள்ளலாம்.
எஸ். சவிரிமுத்து
73, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.



வாடிக்கைக்காரர்களுக்கும், அன்பர்களுக்கும்
எமது உளங்கனிந்த
தீபாவளி வாழ்த்துக்கள்!
V.K. இராசரத்தினம்
(றேடியோ விற்பனையாளர்களும் திருத்துபவர்களும்)
11/5, ஸ்ரான்லி வீதி, -:- யாழ்ப்பாணம்.



ஆதரவாளர்களுக்கும் வர்த்தக அன்பர்களுக்கும்
எமது உளங்கனிந்த
தீபாவளி வாழ்த்துக்கள்!
சாமி அன் சன்ஸ்
[சவர்சில்வர் மொத்த சில்லறை வியாபாரிகள்]
(உரிமையாளர்: சி. கந்தசாமி)
163, கே. கே. எஸ். றோட், — யாழ்ப்பாணம்.



அன்பர்கள் ஆதர[illegible]கள்
அனைவருக்கும்
எனதிதயம் பூரித்த
தீபாவளி வாழ்த்துக்கள்
உரித்தாகுக
கே. எம். நடராஜா
சிவஞானம்ஸ்
படம்பிடிப்பாளர்
அச்சுவேலி.



இத்தீபாவளி நன்னாளில்
எங்கள்
அன்பர்களுக்கும் ஆதரவாளர்கட்கும்
எங்கள் உளங்கனிந்த
தீபாவளி வாழ்த்துக்கள்
நா. துரையப்பா பத்தர்
அன் சன்ஸ்
நகை வைர வியாபாரம்
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
போன்: 7080



இத்தீபாவளி நன்னாளில்
எங்கள்
அன்பர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும்
எங்கள் உளங்கனிந்த
தீபாவளி நல்வாழ்த்துக்கள்!
ஏ. கே. எஸ்.
ஜுவல்லர்ஸ்
DIAL 519 யாழ்ப்பாணம்.



எல்லோர்க்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்!
பாரத் ஸ்ருடியோ
போன்: 252
கஸ்தூரியார் வீதி, -- யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூல, வேல்வழிபாடு ஈழத்தில் பரவியது எவ்வாறு?

— க. வை. ஆ. சர்மா —

பாரத நாட்டுக்கும் இலங்கைக்கும் உள்ள தொடர்பு இன்று அல்லது நேற்று உண்டானது அன்று. இராமபிரான் கால முதலாகவே அது அமைந்தது. அதனையடுத்துப் பாரதத்திலிருந்து விஜயன் இலங்கைக்கு வந்த பின்பே சிங்கள சமுதாயமே தோன்றியது என்பது சரித்திர வரலாறு. தமிழர் படையெடுப்பு, தமிழர் குடியேற்றம், சிங்கள அரசாட்சி, தமிழரசாட்சி என்பன நெடுங்காலமாகவே பின்னிப் பிணைந்துள்ளன.

வளம்பொருந்திய இலங்கையை நாற்புறமும் கடல் சூழ்ந்திருப்பதே அதற்குச் சிறந்த ஓர் அரணாகும். சைவமும் பௌத்தமும் கலந்து இணங்கியும் பிணங்கியும் வாழ்ந்த இலங்கைக்கு இங்கிருந்த இயற்கைவளமே பிற நாட்டவர் கண்களை உறுத்துவதாயிற்று.

முதலில், வணிகத்துறையில் சிறந்தவர்களான முகம்மதியர் ஈழத்தை நாடிவரலாயினர். அவ்வாறு வந்தவர் பெரிதும் முயற்சியுடையவர்களாக இருந்தமையின் சிறிதுசிறிதாக நாட்டில் வாழ இடம்பெற்றனர். அதனால் இஸ்லாம் சமயமும் இங்கு நுழைந்தது. வந்த முகம்மதியர் தங்கள் சமயத்தில் உறுதி கொண்டிருந்தும் நாட்டு விவகாரத்தின் பொருட்டுத் தமிழைப் பயின்று காலகதியில் தமிழையே தாய்ப்பாஷையாகக் கொண்ட தமிழ் முகம்மதியராக மாறிவிட்டனர்.

அக்காலத்தில், ஐரோப்பாவில் கப்பல் கட்டுந்துறையில் சிறந்து விளங்கியவர் போர்த்துக்கேயர். முகம்மதியர் ஈழநாட்டுடன் தொடர்பு கொண்டு தம்மிடம் செய்யும் வியாபாரத்தை அறிந்த போர்த்துக்கேயர் தாமே நேரில் அதனைச் செய்யும் நோக்கமாக இலங்கைக்கு வந்தனர். வந்தவர்கள் சும்மா வரவில்லை, மேலை நாட்டு நாகரிகத்தையும் கிறீஸ்தவ சமயத்தையுமே கொண்டுவந்தனர். முதலில் கரைநாட்டிலே தங்கியிருக்க இடம்பெற்ற போர்த்துக்கேயர் சிறிதுசிறிதாக நாடு முழுவதையுமே கைப்பற்றி ஆட்சிபுரியத் தலைப்பட்டனர். அதனால், சைவமும் பௌத்தமும் நசுங்க கிறீஸ்தவம் பரவத்தலைப்பட்டது.

எமது இலங்கையில் வாழ்ந்த சைவ, பௌத்த மதங்களில் உறுதிகொண்ட மக்கள் உள்ளொன்று கொண்டு புறம்பொன்று காட்டும் போலி வேடதாரிகளாக வாழவேண்டிய நிர்ப்பந்தநிலை முதலில் ஆட்சியைக் கைப்பற்றிய போர்த்துக்கேயரால் நேர்ந்தது.

போர்த்துக்கேயரையும் வெல்லுந்திறம்படைத்த மற்றொரு ஐரோப்பியசாதியினரான ஒல்லாந்தர் அதன்பின் வந்து போர்த்துக்கேயரைத் துரத்திவிட்டு இலங்கையின் ஆட்சியைக் கைப்பற்றலாயினர். போர்த்துக்கேயர் கத்தோலிக்ககிறீஸ்தவர் உருவ வழிபாட்டை நம்புகிறவர்கள். ஒல்லாந்தரும் கிறீஸ்தவரேயாயினும் புரொட்டஸ்தாந்தியரான கிறீஸ்தவர் ஆவர். ஒரு சிலகத்தோலிக்க கொள்கைகளை வெறுப்பவர்கள்; உருவவழிபாடுசெய்யாதவர்கள்.

ஒல்லாந்தரது ஆட்சி காலத்திலேயே இலங்கையில் மதக்கொடுமை தலைவிரித்துத் தாண்டவமாடியது எனலாம். உருவவழிபாட்டை வெறுப்பவரான ஒல்லாந்தர் அக்காலத்தில் இலங்கைவாழ்மக்களை வலுக்கட்டாயமாகக் கிறீஸ்தவராக்க முனைந்தனர். சைவக் கோவில்களை இடித்துத்தரைமட்டமாக்கினர். சிவசின்னங்கள் அணிவதைத்தடுத்தனர். அணிந்தவர்களைத் தண்டித்தனர். வாழையிலையில் உணவு படைத்து உண்ணக்கூடாது எனத்தடை விதித்தனர். நமது முன்னோர்களான சைவசமயிகள் அனுபவித்த துன்பம் சொல்லுந்தரமன்று. இத்தனை இம்சைகளின் மத்தியிலும் நமது முன்னோர் சைவசமயத்தை மறைமுகமாக விடாது கைப்பற்றி வாழ்ந்துவந்தனர் என்றால் அதுவும் இறைவனது மறக்கருணையின் அருட்செயலென்றுதான் சொல்ல வேண்டும்.

பரம்பரையாக வழிபாடு செய்துவந்த இடங்களில் சிவபிரானுக்குரிய சின்னமாகிய மூவிலைச் சூலத்தை நட்டு அதன் இருபக்கச்சுடர்களையும் துணியால் மறைத்து வெளியே காண்பவர் கிறீஸ்தவ சிலுவை வழிபாடு செய்கிறார்கள் என நினைக்கும்படி செய்து, சைவவழிபாட்டை மறைவாகச் செய்து வந்தனர். சிவபிரானுக்கும் வைரவப் பெருமானுக்கும் கையில் தரிக்கும் ஆயுதமாக அமைவதே மூவிலைச்சூலம்.

சிவபரம்பொருள் கொள்ளும் அருள் திருமூர்த்தங்களுள் ஒன்றாக விளங்குவதே வைரவத் திருக்கோலம். இதற்கு ஆதாரமாக விளங்குவது திருநாவுக்கரசு நாயனார் திருச்சேறை என்னுந் தலத்தில் எழுந்தருளியுள்ள சிவபரம்பொருளைக் குறித்துப் பாடிய திருநேரிசை ஆறாம்பாசுரமாகும். அது வருமாறு:-

''விரித்தபல் கதிர்கொள்
சூலம் வெடிபடு
தமருகங்கை
வரித்ததோர் கோலகால
பயிரவ னாகி வேழம்
உரித்துமை அஞ்சக் கண்டு
ஒண்திரு மணிவாய்விள்ளச்
சிரித்தருள் செய்தார்
சேறைச் செந்நெறிச்
செல்வனாரே.''

மதங்கொண்ட யானை (கஜமுகாசுரன்) எதிர்த்துவருகிறது. உமையம்மையார் அஞ்சுவது போலக் காட்சியருளுகின்றார். திருச்சேறை என்னுந்தலத்திற் கோயில்கொண்டு வீற்றிருக்கும் சிவபரம்பொருள் ஒருதிருக்கரத்திலே ஒளிமிக்க மூவிலைச் சூலம், மற்றொரு திருக்கரத்திலே ஒலி பிறக்கும் உடுக்கை பொருந்த வைரவத்திருக் கோலங்கொள்கிறார். வந்த யானையைச் சூலத்தாற்குற்றியடக்கி அதன் தோலை உரித்துப் போர்த்துக் கொண்டு புன்முறுவல் பூத்தருளுகின்றார், என்பது. இதிலிருந்து சூலப்படையென்பது ஓராயுதமேயன்றி மூர்த்தி யல்லவென்பதும், சிவபிரானுக்கும், தேவிக்கும், வைரவப் பெருமானுக்கும் கைப்படையானது என்பதும், அவர்களது அதிகாரம்பெற்ற அஸ்திரதேவராக வழிபாடு செய்வதற்கும் உரியது என்பதும் பெறப்படுகின்றன. இதுவே ஈழத்திருநாட்டில் வைரவசூல வழிபாடு பரவிய காரணம் எனலாம்.

அடுத்தது வேல்வழிபாடு. வேல் என்பது முருகப்பெருமானுக்குரிய ஞான சக்தி என்னும் ஆயுதமாகும். அந்த வேல் என்பது இங்கே முருகமூர்த்தியாக வழிபாடுசெய்யப்படும் அரசிலை வடிவான வேலன்று. அது இருபக்கங்களிலும் தனித்தனி மூன்று நுதிகளும் உச்சியில் ஒரு நுதியும் கொண்ட[illegible]வாறான வேலாயுதத்தைத் தாபித்து வழிபட்டால் ஆட்சியாளரின் ஐயப்பாட்டுக்கு ஆளாகநேரிடுமென்றுநினைத்துப் போலும் ஏறக்குறையச் சிலுவை போன்ற அமைப்பில் வேலைத்தாபித்து நமது முன்னோர் வழிபட்டு வந்திருக்கவேண்டும்.

அது மாத்திரமா? கொம்பு முளைத்த தேங்காயைக்கண்டால் அதனைப் பிள்ளையார் எனமதித்து வழிபட்டும் வந்திருக்கிறார்கள். பக்திமார்க்கம் என்பது வேதாகம சாஸ்திரவரம்புக்கு உட்படாதது. புறச்சமயிகளின் வலுத்தாக்கம் ஒழிந்து ஓரளவுக்குச் சமய சுதந்திரம் கிடைத்தது ஒல்லாந்தரை வென்று இலங்கையைத்தமக்குரிமைப்படுத்திய ஆங்கிலேய ஆட்சிக் காலத்திலாகும்.

ஆங்கிலேய ஆட்சி வலுப்பட்டபின்புதான் இலங்கையில் பழைய சைவ ஆலயங்கள் வேதாகம சாஸ்திரப் பிரமாணப்படி புனருத்தாரணம் செய்யப்பெற்றன. அப்படி அமைந்தவற்றுள் சிறந்து விளங்குவது நல்லூர் கந்தசுவாமிகோவில். அங்கே மூலமூர்த்தி அரசிலை வேலாகவே இன்றும் வழிபடப்படுகிறது. இதனையே ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் கண்டித்து மூர்த்தியையத்

(VIம் பக்கம் பார்க்க)


# மெஸர்ஸ் சி. சின்னத்துரை & பிரதர்ஸ்

**39, காங்கேசன்துறை வீதி -::- யாழ்ப்பாணம்**

என்ற ஸ்தாபனத்தாரை யாழ்ப்பாணப் பகுதிக்கு எங்களது ஏகவிநியோகஸ்தர்களாக நியமித்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

புத்தாடை பூண்டு மகிழ்ந்திருக்கும் இத்தீபாவளித் திருநாளில்
எங்கள் மனமார்ந்த
வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பிரிட்டிஷ் சிலோன் கார்ப்பரேஷன் லிமிட்டெட்
(British Ceylon Corporation Ltd.)

ஓரியன்ற் கம்பெனி (சிலோன்) லிமிட்டெட்
(Orient Company (Ceylon) Ltd.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவப்படுகுழியில்.....

(IVம் பக்கத் தொடர்ச்சி)

"ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன் பின்சாரப் பொய்யாமை நன்று" என்று தெய்வப் புலமைத் திருவள்ளுவர் கூறுகிறார். அறிஞர்கள் வகுத்த அறங்களுள் தன்னோடு இணைப்பதின்றித் தானேயாக நல்லது கொல்லாமை. அஃது ஒழிந்தால் பொய்யாமை பின்னே நிற்க நன்று என்பது வள்ளுவர் வாக்கின் பொருள். கொல்லாமை நல்லது. அதன் பின் பொய் சொல்லாமை நல்லது. தன்னுயிருக்குத் துன்பம் நேரிட்டாலும் மற்ற உயிர்களைக் கொலை மாட்டார்கள் அறிவுடையோர். "தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான் பிறிது இன்னுயிர் நீக்கும் வினை" என்பது வள்ளுவர் வாக்கு. இந்த உறுதியில் நிற்பவருக்குத் தீங்கு நேரிடாது. "கொல்லாமற் கொன்றதைத் தின்னாமற் குத்திரம் கோள் களவு கல்லாமற் கைதவரோடிணங்காமற் கனவிலும் பொய் சொல்லாமற் சொற்களைக் கேளாமற் றோகையர் மாயையிலே செல்லாமற் செல்வம் தருவாய் இதம்பர தேசிகனே" என்று பட்டினத்தடிகள் இறைவனிடத்தில் வரம் கேட்கிறார்.

"கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை வல்லிடிக்காரர் வலிக்கயிற்றாற் கட்டிச் செல்லிடு நில்லென்று தீவாய் நரகிடை நில்லிடு மென்று நிறுத்துவர் தாமே". கொலை செய்தவர்கள் நரக துன்பம் அனுபவிப்பார்கள். பிரளயாகிய நரகத்தில் எவ்வளவு துன்பங்கள் அனுபவிக்கிறார்கள்.

"பொல்லாப் புலாலை நுகரும் புலையரை எல்லாருங் காணவியமன்றன் தூதுவர் செல்லாகப் பற்றிய தீவாய் நரகத்தின் மல்லாக்கத் தள்ளி மறித்துவைப்பாரே" என்றும் திருமூலநாயனார் திருமந்திரத்தில் செப்புகிறார். "கொலையே களவு கள் காமம் பொய் கூறல்—மலைவான பாதகமாமவை நீக்கித் தலையாஞ் சிவனைச் சார்ந்தின்பஞ் சார்ந்தோர்க்— கிலையாமிவை ஞானானந்தத் திருத்தலே" என்று திருமூலர் கூறுகிறார்.

கொலை செய்துதான் புலாலை உண்ண வேண்டும். புலாலை உண்டவர்களை யமன் தூதுவர் அளப்பருந் துன்பஞ் செய்வரென்று நாம் அறிகிறோம். பஞ்சமா பாதகம் செய்யாதவர் சிவலோக வாழ்விற்குரியர். எத்தனை எத்தனை வியாதிகள் தான் இக்காலத்தில் உள. ஒரு வைத்திய சாலைக்குச் சென்று பார்த்தால் தெரியுமல்லவா? அது மாத்திரமா, வீடுகளிலும் எத்தனை பேர் நோய்வாய்ப்பட்டுப் படுக்கையிலிருந்து நெடுங்காலம் துன்பத்தில் அழுந்துகிறார்கள். எத்தனை பேர் போக்குவரத்தில் மோதுண்டும் ஆகாய விமானம் வீழ்ந்தும் உயிர்நீக்கின்றனர். இம்மாதிரி அநேக அவலவழிகளில் உடற்றுன்பம் அனுபவிக்கின்றனர் பலர். இவை முன்னர் பிறவிகளில் செய்த பஞ்சமாபாதகங்களினாலன்றோ? பலர் நோயாளிகளைப் பார்த்தும் திருந்துகிறார்களில்லை. அந்தந்த நேரத்தில் சிலர் உணர்வார்கள். பின் ஆணவத்தின் தூண்டுதலினால் மயக்க உணர்வு உண்டாகின்றது. அதனால் பாதகங்களைச் செய்கிறார்கள். இந்தப் பரந்த உலகமே எமக்கு ஒரு சிறந்த புத்தகமாகக் காட்சியளிக்கின்றது. நாம் மக்கள்படுந் துன்பங்களைப் பார்த்தும் படிக்கிறதில்லை. பின்னும் பாவமான படுகுழியில் வீழ்கிறோம்.

இக்காலத்தில் தற்கொலைக்கோர் அளவில்லை. எங்கு பார்த்தாலும் வெறும் காதலுக்காகவும், மாணவர்கள் பரீட்சையில் தோல்விக்காகவும், தீராநோய்க்காகவும், குடும்ப ஒற்றுமையின்மைக்காகவும், இந்தப் பரந்த உலகம் இருக்கவும் ஊதியம் பெறக்கூடிய ஒரு தொழில் தமக்குக் கிட்டவில்லையே என்ற போலி நியாயத்திற்காகவும் பலர் தம் அரிய உயிரை நீக்குகிறார்கள். இந்த மானிடப் பிறவி ஒரு பெரிய பொக்கிஷம். கடலை நீந்திக் கரை சேர்வதற்குச் சமம் மானிடப்பிறவி எடுப்பது என்று சித்தாந்த நூலாசிரியராகிய அருணந்திசிவாசாரியார் செப்புகிறார். "கடலைக்கையால் நீந்தினன் காரியங்காண்" என்கிறார்.

"இப்பிறவி தப்பினால் எது வருமோ" என்றும் "மானிடப் பிறவிதான் அரிதினும் அரிதுகாண்" "அரிது அரிது மானிடராதல்" என்றும் ஆன்றோர் கூறுகிறார்கள். கையினால் சிவதொண்டு செய்தும், தலையினால் வணங்கியும், வாயினால் வாழ்த்தியும், மனத்தினால் நினைத்தும் சிவனைவழிபட மானுடப் பிறவி வேண்டுமென்று தேவர்களும் தவம் கிடக்கிறார்கள். இத்தகைய பெருமை வாய்ந்த மனித உடலை ஒரு பொருளென மதியாது பல வழிகளினால் தற்கொலைபுரிகிறார்கள்- எவ்வளவு அறியாமை! இதைப் பற்றி வைத்தியசாலைகளிலும் பிரசங்க மேடைகளிலும் மக்களுக்கு அறிவுறுத்துவது அறிஞர்களின் பெரும் பொறுப்பு. தற்கொலைசெய்வோர் பேய்வடிவம் பெற்று உழலுவார்களென்றும், அளவிலாத் துன்பத்திற்கு ஆளாகிச்சுழன்று திரிவார்களென்றும் ஆகமங்கள் செப்புகின்றன. தீய, இழிந்தபிறவிகளில் இவர்கள் சுழன்று நல்லறிவு தலைப்பட்டு மீண்டு நற்பிறப்பெய்துவார்கள். தற்கொலைசெய்வோர் பெருங்கோழைகள். எத்தனை கஷ்டங்கள் வந்தாலும் அவற்றைப் பொறுமையுடன் தாங்கி இறைவனிட்ட வழி செல்லவேண்டும். "மலையே வந்து வீழினும் மனிதர்காள் நிலையில் நின்று கலங்கப் பெறுதிரேல்" என்று திருநாவுக்கரசு சுவாமிகள் கூறுகிறார். ஆணவமலம் நீங்கினால் சுகம் உண்டாகும். இப்பிறவியில் கஷ்டங்களை அனுபவித்துத் தொலைத்தால் மேலைப் பிறவிகளில் சுகம்பெறலாம்.

# சூல, வேல்வழிபாடு ஈழத்தில் பரவியது.....

(V-ம்பக்கத் தொடர்ச்சி)

தாபிக்க முயன்றார் மூலஸ்தானத்தை முடியும்சிகரமும் வைத்த கோவிலாக்கப்பாடுபட்டார். ஆயினும் அம் முயற்சி கைகூடவில்லை. இன்றும் அது மடாலயமாகவே இருக்கிறது.

வேல் நாயகத்தை வழிபடலாகாது எனக் கூறுவதாக எவரும் கருதலாகாது. வேல்நாயகம் ஞானசக்தி. அதன்பெருமை அளவிடற்கு அரியது. இச்சா சக்தி கிரியா சக்தி ஞானசக்தி ஆகிய மூன்று சக்திகளும் ஒன்றுபட்டு விளங்கும் மூர்த்தியே சுப்பிரமணியப்பெருமான் ஆவர். அந்த உண்மையை உணராமல் ஞானசக்தியாகியவேலை மாத்திரம் முருக மூர்த்தியாகப்பாவிப்பதையே நாவலர்பெருமான் கண்டித்தாரென்பதை எவராலும்மறுக்கமுடியாது.

ஆணவத்தின் தோற்றமாய் அமைந்து தேவரையும் யாவரையும் நூற்றெட்டு யுககாலமாகத் துன்புறுத்திய சூரபன்மாவை ஆட்கொள்ளவந்த ஆறுமுகப்பெருமான் ஞானசக்தியாகிய வேல்நாயகத்தை அவனுக்கு எதிராகச் செலுத்தியருளுகிறார். அப்பொழுதுவேல் நாயகத்தின் பெருமையை ஆற்றலைக் கந்தபுராணத்திலே கச்சியப்பசுவாமிகள் மிக அழகாகக் காட்டுகிறார்.

"ஏயென முருகன்
தொட்ட இருதலை
படைத்த ஞாங்கர்
ஆயிர கோடியென்னும்
அருக்கரில் திகழ்ந்து
தோன்றித்
தீயழற் சிகழிகான்று
சென்றிட அவுணன்
கொண்ட
மாயிருள் உருவமுற்றும்
வல்விரைந்தகன்ற
தன்றே"

இரு பக்கமும் நுதிகளைக் கொண்ட வேல்நாயகத்தை முருகப்பெருமான் பார்த்து அவுணனாகிய சூரபன்மா கொண்ட மாயத்தன்மை வாய்ந்த பராக்கிரமத்தைக் கெடுத்து அடக்குவாயாக என ஏவியவுடனே, அந்த ஞானசக்தியாகும் வேற்படையானது ஆயிரங்கோடி சூரியர் ஒருங்கே உதித்தாற் போன்ற பேரொளிகொண்டு சென்றிடச் சூரபன்மா கொண்ட இருள் வடிவம் முழுவதும் அழிந்தது.

வேற்படை என்பது ஏவியதைச் செய்யும் வலி படைத்த எளிய கருவி தானே என்று எவரும் எண்ணலாகாது. அந்த வேல்நாயகமோ முழுமுதற்கடவுளாகிய இறைவனது ஆணையைத் தாங்கிச்செல்வது; தனக்கென மதிக்கவொண்ணாப் பேராற்றல்பெற்றது, சினங் கொள்ளும் திறமைகொண்டது எனப் பின்வரும்பாடல்களால் அறியலாம்.

"தென்திரை நடுவண்
நின்றதீயவன் செயலும்
அன்னான்
கொண்டிடும் உருவும்
உள்ளக் கொள்கையும்
வலியுஞ்சீரும்
அண்டர்கள் எவர்க்கும்
மேலாம் ஆதியம்பகவன்
தொட்ட
வண்டொடர் தனிவேல்
காணாவெஞ்சினம்
விளைத்ததன்றே"

சமுத்திர மத்தியிலே மாயத்தன்மையால் சூரபன்மா தானே கொண்ட மாமரவடிவத்தையும் அவன் செய்யத் தொடங்கிய செயலையும் அவனது உள்ளக் கருத்தையும், அவனது தவவலிமையையும், அவன் பெற்ற வரங்களின் சிறப்புகளையும் தேவாதிதேவனாகிய முருகப்பெருமான் செலுத்தியருளிய வேல் நாயகமானது வான் வழிச்செல்லும்போது உணர்ந்து கடுஞ்சினங்கொண்டது. இப்படிச் சொல்லப்பட்டதனால் வேல்நாயகம் உணர்ச்சியற்ற படைக்கலம் அன்று என்பதும், சிந்தனையுணர்வுடைய பேராற்றல்வாய்ந்த ஒரு தெய்வம் என்பதும் பெறப்படும். இதனால் வேல் வழிபாடு போற்றத்தக்கதேயாம். ஆயினும், வேலை முருகனாக வழிபடுதல் தகாது என்பதே இங்கு காட்டப்பட்டது.

"மேலும், வேல் நாயகத்தை உவமித்துக் காட்ட முற்பட்ட கச்சியப்ப சுவாமிகள் சொல்லுந்தரம் நினைந்து நினைந்து போற்றத்தக்கது.

"வேதனை அகத்தராகும்
விண்ணவர் படைகள்
தம்முள்
யாதனை இதற்கு நேரா
இயம்புவது எயிற்
றோன்றிப்
பூதனை உயிர் உண்கள்வன்
புண்டரீகத்தன்வன்மை
சோதனை புரிந்த மேலோன்
சூலமேயென்பதல்லால்"

பிரமதேவனை முதலாகச் சொல்லப்படுந் தேவர்களுக்குரிய படைக்கலங்களுள் எதனைத்தான் இந்த வேற்படைக்கு உவமை கூற முடியும்? எதனையும் கூற முடியாதே. ஆயினும், பூதனை என்னும் அரக்கியின் உயிரை அவளது முலைப்பாலுடன் சேர்த்துக் கவர்ந்த மாயக் கண்ணனாக அவதரித்த

(7ம் பக்கம் பார்க்க)

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது உளங்கனிந்த
**தீபாவளி வாழ்த்துக்கள்**
உரித்தாகுக!
**கணேசானந்தாஸ்**
(முட்டர்சுக்கடைச் சந்திக்கருகாமையில்)
208, K. K. S. ரோட், யாழ்ப்பாணம்.

இத்தீபாவளி நன்னாளில்
எங்கள்
அன்பர்களுக்கும் ஆதரவாளர்கட்கும்
வாடிக்கைக்காரர்களுக்கும்
எங்கள் உளங்கனிந்த
**தீபாவளி நல்வாழ்த்துக்கள்**
**WINSLOW GARAGE,**
AUTOMOBILE ENGINEER
Power House Road, Jaffna.
Phone: 269

பெரியோர்கள், ஆசிரியர்கள், நண்பர்கள், நெசவு செய்யும் சகோதரிகள், யாவர்க்கும் எனது
**தீபாவளி வாழ்த்து**
உரித்தாகுக.
மேலும் நெசவுக்கேற்ற தறிகள், லாப்பிங்மெசின், வைண்டிங் மெசின், டொபி என்பன ஒடருக்குச் செய்து கொடுக்கப்படும். விரும்புவோர் கீழ்க்காணும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.
சி. மகாலிங்கம், உச்சிவோடை, மானிப்பாய்.
1032

**பலவீனம் ... மெலிவு ... களைப்பு ...**
சில வேளைகளில் இதற்கு
காரணமாவது:
- உங்களுக்கு உணவின் உண்மையான உருசி கிடைக்காமல் போவதுடன் ஆகாரத்தில் உங்களுக்கு பிரியமில்லாமலிருப்பது.
- நீங்கள் சத்துள்ள ஆகாரங்களை உட்கொண்டாலும் ஜீரணமாகும் சக்தியும் உணவின் சத்துக்களை இரகித்துக்கொள்ளும் தன்மையும் இன்மையால் இவற்றின் உண்மையான பலனைப் பெறாமல் போதல்.
- இரவில் நல்ல தூக்கமில்லாது மறுநாள் செய்யவேண்டிய முழுவேலையையும் செய்வதற்கு சக்தியற்ற நிலையில் காலையில் எழுந்திருத்தல்.
- இழந்த வாலிபத்தை திரும்பவும் பெறலாம்.

**மெகவிடோன்**
உங்கள் ஆகாரத்தின் ருசியை அதிகரிக்கிறது. ஆகாரம் ஜீரணமாக உதவிபுரிகிறது நரம்புகளைப் போஷிக்கிறது. உங்கள் உணவுகளுக்கு வைட்டமின், கனிப்பொருட்கள் மற்றும் நரம்புகளைப் போஷிக்கும் பொருட்கள் அடங்கிய விசேட போஷணையைப் பெற்றுக்கொடுக்கிறது.
உங்கள் மருந்து வியாபாரியிடமோ அல்லது கொழும்பு—3
**ஓரியன்டல் ட்றக் ஸ்ரோர்ஸ் லிமிட்டெட்டிலிருந்தோ**
பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org